# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை


## நெஞ்சமென்னும் ஏட்டினிலே....!

—புலவர் தி. நா. அறிவுஒளி—

நெஞ்சமெனும் ஏட்டினிலே நீண்டகதை எழுதுகின்றேன்!
கொஞ்சுமொழிற் பாட்டினிலே நெஞ்சுணர்வை எழுதுகின்றேன்!
பிஞ்சுமன ஏக்கத்தைப் பிழிந்துகதை எழுதுகின்றேன்!
கெஞ்சுமுயிர் பாடுபடும் கிளர்ச்சிகளை எழுதுகின்றேன்!

அஞ்சுகின்ற நெஞ்சத்தின் அழுகுரலை எழுதுகின்றேன்!
விஞ்சுகின்ற உள்ளுணர்வின் விம்மலினை எழுதுகின்றேன்!
தஞ்சமெனும் உயிர்த்துடிப்பின் தவிதவிப்பை எழுதுகின்றேன்!
எஞ்சுகின்ற இளமைமன இடிபாட்டை எழுதுகின்றேன்!

இரக்கத்திற் குரியோரின் இழிநிலையை எழுதுகின்றேன்!
மரநெஞ்சர் கயமைகளின் மடமையினை எழுதுகின்றேன்!
வலிவிழந்தார் வருத்தத்தை அழுகையுடன் எழுதுகின்றேன்!
வலிவுடையார் கொடுமைகளைக் குமுறிமனம் எழுதுகின்றேன்!

ஆவலெனும் கோட்டைவிழ அவலத்தை எழுதுகின்றேன்
ஆர்வமென்னும் கோவில்விழ அகமுருக எழுதுகின்றேன்
காவலிலா வாழ்க்கைவிழா கணத்தழிதல் எழுதுகின்றேன்
காதலெனுங் கூத்தழியக் கண்ணீரால் எழுதுகின்றேன்

பூத்தமலர் உதிர்ந்தகதை புலம்பமனம் எழுதுகின்றேன்
பொங்குகடல் ஊழியினால் புதைந்தஉல கெழுதுகின்றேன்
நேற்றையொடு நிகழ்கால வரலாற்றை எழுதுகின்றேன்
நிமிர்ந்துணர்வின் வளர்ச்சிகளை நினைவேட்டில் எழுதுகின்றேன்


விலை 20 காசு

21—6—70

## அட்வான்ஸ் 'ச்ரூ'

தலைக்கண்டத்திலேயே, தமிழ் நாட்டில்தான் அமைதியான, ஆரவாரமற்ற ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று பிற மாநிலங்கள் அனைத்தும் ஒருமுகமாகப் பாராட்டி இருப்பதுடன், மற்ற மாநிலத்து ஏடுகளும் வெகுவாகப் புகழ்ந்துமிருக்கின்றன. மற்றவர்கள் தி. மு. க. ஆட்சியைப் பாராட்டுவதையேகூட பொறுத்துக்கொள்ள முடியாத கருகிய உள்ளங்கொண்ட காங்கிரசார், வெட்கத்தையும்விட்டு விவேகமுங்கெட்டு. 'இப்படிப் பாராட்டலாமா?' என்று கேட்டார்கள். கேள்வியுடனேயே சாந்தியடையக்கூடியனவா அந்த சாக்கடை உள்ளங்கள்? எப்படியாவது எந்தக் காரணங் கற்பித்தாவது குழப்பமூட்டிக் கொண்டே இருந்தால்தான், ஆட்சியினர், மக்கள் பிரச்னைகளில் கவனம் செலுத்தி நல்ல காரியங்களைச் செய்ய முடியாமல், திணறுவார்கள். அதனைக் காரணங்காட்டியே 1972ஐச் சந்திக்கலாம் என்ற இழிந்த எண்ணங் கொண்டு செயல்படத் தொடங்கி இருக்கிறார்கள். இந்த எண்ணத்தின் பிறப்புக்கள்தான் மதுரைச் சம்பவங்களாகத் தெரிகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்களது பெருமனம் காரணமாகவே, மதுரையில் அங்குமிங்குமாகச் செயல்பட்டு வந்த நீதிமன்றப் பணிகள், ஒரே கட்டிடத்தில் செயல்பட முடிந்தது என்பதை, நாளைய வரலாறு குறிப்பிடப்போகிறது. நீதிமன்றம் ஒரே கட்டிடத்துக்கு வரக்கூடாது என்பதனைத் தடுத்து வந்த காங்கிரசுக்காரர்கள் இனி அதனைத் தடுக்க முடியாது என்ற நிலையேற்பட்ட பின்பு, பேரறிஞர் அண்ணா சிலைக்கு எதிர்ப்பு என்பதன் பேரால், கருப்புக் கொடி காட்டி கலாம் விளைவித்திருக்கிறார்கள். கருப்புக்கொடிகாட்டுவது என்பது ஜனநாயகத்தில் அனுமதிக்கப்பட்ட முறைதான் என்றாலும், கூறப்படுகின்ற காரணங்கள் காரணமாக பலசந்தர்ப்பங்களில் மறுக்கப்படுவதுமுண்டு, ஜனநாயகக் காவலராக விளங்கவேண்டிய நேருவே, ஒரு சமயம், ஜனநாயக விரோதப் போக்கை மேற்கொண்டார் என்பதற்காகக் கண்டித்து, கருப்புக்கொடி காட்ட தி. மு. க. முயன்றபோது, காங்கிரசுக்காரர்கள் குதிரைப்படை கொண்டு தாக்கியதை நாடு மறந்து விடவில்லை. தாக்குதல் நடத்தியவர்களே இப்போது கருப்புக்கொடி என்ற கலவரத்தைத் தோற்றுவித்து, பொருந்தாத காரணங்களும் கூறி, அமைதிக்குக் கேடுண்டாக்கி இருக்கிறார்கள். வன்முறைகளுக்கு ஊக்கந்தரத்தக்க வகையில் அமைப்பின் இதயம் இருப்பதறிந்து, போலீஸ் முன்னதாகவே, அம் மனப்பான்மையினரைக் கைது செய்து பின்பு விடுதலையும் செய்திருக்கிறது. 'பிசுபிசுத்தது' என்ற செய்திக்கு அஞ்சியவர்கள் விரும்பத்தகாத விளைவுகளை உண்டாக்கி இருக்கிறார்கள். இதற்கென சென்னையில் ஒரு ஊர்வலம்! இதைப்போலவே கோவையிலும் ஒரு போராட்டம் 75 அடிக்குமேல் ஆழமுள்ள கிணறுகளுக்கு மின் கட்டணம் உயர்த்தப்பட்டதை எதிர்த்து! விதிவிலக்கின் மூலம் பெரும்பான்மையான ஏழை விவசாயிகள் பயன் பெற்றிருக்கின்றனர். 15 சதவீதத்துக்கும் குறைவானவர்களே இதனால் அதிகக் கட்டணம், யூனிட்டுக்கு ஒரேஒரு பைசா அதிகம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தான் கண்டன ஊர்வலம் நடத்தி இருக்கிறார்கள். நடுத்தரத்தையும் தாண்டிய சற்றே உயர்ந்த அந்தஸ்துடையவர்கள். இவர்கள் கூடிதான் பஸ்களைக் கொளுத்தினார்களா? போலீசார் மீது கல்லெறிந்தார்களா? இப்படி நடைபெறவேண்டும் என்பதைத்தான் மன்றாடியார்கள் விரும்புகிறார்களா? போராட்டம் அறியாமைத்தன்மையுடையது என்று கூட நம்ப முடியவில்லை. ஆணவத்தன்மையில் அமைகப்பட்டிருக்கிறது என்றே கருதவேண்டியிருக்கிறது. இவையெல்லாம் நாட்டில் குழப்ப நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அராஜகம் விளைவிக்கும் நடைமுறைகளேயாகும். திட்டமிட்ட வன்முறைப் போக்குகளாகும் இவை, இவைகளின் மூலம்தான் 1972 ஐச் சந்திக்கவேண்டும் என்று நினைத்தால், இப்போதே, அவர்களுக்குச் ''ச்ரூ''க்களை உதிர்த்துவைக்கலாம்!

## கேட்டீரா! சேதி!

## போராட்டம் படுத்தும்பாடு

'இண்டிகேட்' தலைவரும், இளந்துருக்கியரும், பம்பாய் மாநாட்டுத் தீர்மானங்கள் விரைவில் செயல்படுத்தப்படவில்லையானால், மத்திய அரசு கவிழநேரும் என்று கூறியவரும், இவ்வளவு பெரிய உண்மையை எடுத்துக்காட்டியதால் கூட அல்ல, இவற்றில் அவரது பங்கு எந்த அளவு என்பதை எடுத்துக்காட்டி வெளியேறுவதானால் வெளியேறலாம் என்று பிரதமரின் புகழாரத்துக்கு உரியவருமான சி. சுப்பிரமணியம் அவர்களது ஆதரவும் ஆசியும் கிடைத்துள்ள கோவை மாவட்ட விவசாயிகள்(!) போராட்டம் தொடர்பாக, போராட்டத்தில் பங்குகொண்டோர் எனக் கருதப்படுவோர் சிலரால், திருப்பூர் நகருக்கான குடிநீர் சப்ளை துண்டிக்கப்பட்டது என்று போலீசாரால் குற்றங் கூறப்பட்டிருக்கிறது. திருப்பூருக்கும், மேட்டுப்பாளையத்துக்குமிடையே புகளூர் என்னுமிடத்தில் சப்ளை குழாய் துண்டிக்கப்பட்டிருக்கிறதாம்! இது துண்டிக்கப்பட்டால் ஒரு லட்சம் பேருக்குக் குடிநீர்வசதி இல்லாது போகுமாம்! பாவம். நாடாண்டவர்கள். நலிந்துப்போன காரணத்தாலேயே நக்சல்பாரிகளாகிவிட்டிருக்கிறார்கள்! இவையெல்லாம்தான் போராட்டத்திட்டமோ என்னமோ! வருங்காலப் போராட்டங்களும் இப்படித்தான் இருக்குமோ என்னவோ!

## இதயம் இருக்கிறதா சார்?

அடாவடித்தனமான காரியங்கள் செய்பவர்களைப் பார்த்து உனக்கு இதயமிருக்கிறதா? என்று கேட்பது இப்போதெல்லாம் வழக்கத்திலுள்ள ஒன்று. இனி எதிர்காலத்தில் இப்படிக் கேட்கமுடியாத நிலை தோன்றக்கூடுமோ என்று அஞ்ச வேண்டும்போல் இருக்கிறது. இதயங் கெட்டுடபோனவர்களுக்கு, மாற்று மனித இதயத்தையோ, பன்றி இதயத்தையோ இப்போது பொருத்த முயல்கிறார்கள். வருங்காலத்தில் இதுபோன்ற நிலை யேற்படுபவர்களுக்கு செயற்கை — பிளாஸ்டிக் இதயம் பொருத்துவது சிறந்ததென்று நிபுணர்கள் முடிவுக்கு வந்திருக்கிறார்களாம்! இது பெருகும் போது, யாரும், யாரையும் பார்த்து 'உனக்கு இதயம் இருக்கிறதா?' என்று கேட்க முடியாதல்லவா!

★



**கெட்டுப்போகாதே!**

செய்யக்கூடாதவற்றைச் செய்தாலும் கெட்டுப்போகும்; செய்யவேண்டுவனவற்றைச் செய்யாது போனாலும் கெட்டுவிடும்.

(குறள்)

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 21—6—70 | இதழ் 49

# அடக்கப்போகிறார்களா? அடங்கப்போகிறார்களா?

நக்சல்பாரிகள் என வருணிக்கப்படும் தீவிர கம்யூனிஸ்டுகளின் வெறியாட்டங்கள், நாளுக்கு நாள் எல்லை கடந்துகொண்டிருப்பது குறித்து, துணைக் கண்டத்தின் நலனில் அக்கறை கொண்டிருப்போரால் கவலைப்படாமலிருக்க முடியாது.

சட்டம்—ஒழுங்கைப் பாழ்படுத்தி, பொது அமைதியைக் குலைத்து, கொள்ளை, கொலை, வழிப்பறி முதலானவைகளிலும் தீவிரமாகவும், வெளிப்படையாகவும் ஈடுபடத் தொடங்கிவிட்ட தற்கப்புறமும், இந்த தேசத் துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பவர்களைப்பற்றி மத்திய அரசு, அக்கறையற்றிருக்குமானால், நம்முடைய குற்றச்சாட்டு வேறு மாதிரியாக ஆவதைத் தடுக்க முடியாமற்போய்விடக்கூடும்.

பிரதமர் இந்திரா, காங்கிரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்பு, அல்லது தானாகவே வெளி வந்துவிட்டதாகச் சொல்லிக்கொள்ளத் தொடங்கிய பின்பு, அதுவுமல்லது தானே உண்மையான காங்கிரஸ் என்று பீற்றிக்கொள்ளத் தொடங்கி, காங்கிரஸ் நிறுவனத்தையே கேலிக் குரியதாக்கிவைத்து விட்ட தற்கப்புறம், அவர் பதவியில் நிலைத்திருப்பதற்கு, கம்யூனிஸ்டுக் கட்சியினரின் "பெரியமனம்" இல்லையானால் முடியாது போய்விடும் என்ற நிலை உருவாகிவிட்டதனால், நாட்டில் மலர்ந்து மணம் பரப்பிக்கொண்டிருக்கும் விபரீதங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல!

விபரீதங்கள் மலிந்த— கோரத்தன்மைகள் உருவாகிவிட்ட துணைக்கண்டத்தின் இன்றைய நிலைக்கு, பிரதமரும்கூட உடந்தையோ என்ற வகையில் மக்கள் சிந்திக்கத் தொடங்கினால், அந்த சிந்தனையின் வழியிலேயேதான் நாமும் சிந்தித்து விமர்சனம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடக்கூடும்.

நக்சல்பாரிகளது வெறிச் செயல்கள் குறித்து, "நாடு இப்படித்தான் இருக்கவேண்டும்; அப்போதுதான் அரசியல் வாணிகத்தை அமோகமாக நடத்தலாம்" என்ற எண்ணத்தில் திளைத்திருப்பவர்களைத் தவிர, மற்ற நாட்டு நலனில் பற்றுக்கொண்டோர் அனைவரும் ஒரு முகமாகக் கண்டனந் தெரிவித்தாயிற்று. துணைக்கண்டத்தின் இதழ்கள் யாவும் தத்தம் கருத்துக்களையும் எடுத்துக்காட்டியாயிற்று. ஒரோ சமயம், வலது கம்யூனிஸ்டுகள்கூட கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலேகூட சலசலப்பு எழுந்து அடங்கி இருக்கிறது,

இவ்வளவுக்குப் பிறகும், மத்திய அரசு மிகமெத்தனமாக இருக்கிறதென்றால், அதன் காரணம் என்னவாக இருக்கும் என்பதிலே ஐயப்பாடு எழாமலிருக்கமுடியுமா?

அத்திப் பூத்தாற்போல உள்துறை அமைச்சர் சவாண் இரண்டொரு முறை திருவாய் மலர்ந்திருக்கிறார்.

நக்சல்பாரிகளது நச்சுக்கரங்கள் நசுக்கப்பட, இப்போதுள்ள சட்டங்களே போதுமானது என்றார்கள். சிலவேளைகளில், இவ்வாறுகூறியவர்களுக்கே ஏற்பட்ட சந்தேகமோ என்னவோ, புதிய சட்டம் இயற்றுவது பற்றி ஆராயப்படுகிறது என்றார்கள்.

இவைபோன்ற சொற்சிலம்பங்களால், தீவிரவாதிகளது வன்முறைகள் எந்தவகையிலும் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

மே. வங்கத்தில் ஒரு பெரிய நகரமே, இந்தக் கொடியவர்களின் ஆதிக்கத்திலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல இப்போது வந்திருக்கிற செய்தி, மத்தியில் ஒரு அரசாங்கம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறதா? என்ற வினாவையே தோற்றுவிக்கிறது. இவ்வினாவுக்குரிய செய்தி, படிப்போரை அதிர்ச்சிக்கு ஆளாக்கவில்லையானால், அவர்கள் இந்தியப் பிரஜையாக இருக்க முடியாது. செய்தி இதுதான்:

> "காஷ்மீர், நாகாலாந்து, மிஜோ மலைகள் ஆகியவற்றின் மக்களுக்கு, இந்திய அரசாங்கம், சுய நிர்ணய உரிமையை மறுத்து வந்திருக்கிறது. இந்தத் தவறைத் திருத்தப் போகிறோம்.
>
> அமெரிக்க "ஏகாதிபத்தியவாதிகளும்," "ரஷ்ய ஏகாதிபத்தியவாதிகளும்" இந்தியாவைச் சுரண்டுவதை நிறுத்தப்போகிறோம்.
>
> நக்சல்பாரி கம்யூனிஸ்டுக் கட்சியின் ஜனநாயகப் புரட்சி ஏற்கெனவே ஆரம்பமாகிவிட்டது. ஒரு புரட்சி அரசாங்கத்தை இக்கட்சி அமைக்கும் இந்த அரசாங்கத்துக்கான 14 அம்சத்திட்டம் நக்சல்பாரி கம்யூனிஸ்டுக் கட்சியின் முதலாவது காங்கிரசில், ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.
>
> சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதிக்கத்தின் கீழ், மக்களின் அரசியல் அதிகாரத்தைச் செயல்படுத்த ஒரு புரட்சிக் குழு ஏற்படுத்தப்படும்"

இவை முழுதான செய்திகள் அல்ல. சில பகுதிகளே தான். இவை பற்றிய விவரங்கள் அக்கட்சியின் செய்தி

(16-ம் பக்கம் பார்க்க)



# யாருக்காகப் போராட்டம்?

**அன்புள்ள நண்பா!**

நமது பெருமதிப்புக்குரிய நண்பர்களும், விவசாயத் தொழிலாளர்களது உண்மையான பாதுகாவலர்களுமான கம்யூனிஸ்டு தோழர்கள், நிலப் போராட்டம் ஒன்றை ஆகஸ்டு மாதம் 15-ம் நாள் தொடங்கவிருக்கிறார்கள் என்ற சுவையான செய்தியை நீ ஏற்கெனவே அறிந்திருக்கிறாய் அல்லவா!

இது குறித்த அவர்களது அறிக்கைகளில், இது துணைக்கண்டம் தழுவிய போராட்டம் என்று அறிவித்திருந்தார்கள். இப்போது அந்த அறிவிப்பில் மாற்றங்கள் எதுவுமில்லை யாயினும், மாநிலந் தழுவியப் போராட்டம் என்பதற்கு முக்கியத்துவ மளித்திருக்கிறார்கள்.

எனவே தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில், இப்போராட்டத்தின் பின்னணி பற்றியும் தேவையின்மை பற்றியும் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், விளக்கிவிட்டு போராட்டம் பற்றி மறு ஆய்வு செய்யவேண்டும் என்று கேட்டிருந்தார்கள், கம்யூனிஸ்டு தோழர்களிடம்.

நண்பா! காங்கிரஸ் என்று கூறுகிறபோது நிஜலிங்கப்பா காங்கிரஸ் என்றும், ஜகஜீவன்ராம் காங்கிரஸ் என்றும், பட்நாயக் காங்கிரஸ் என்றும் வேறுபாடு புலப்படுத்திக் காட்டவேண்டி யிருப்பதைப் போலவே, கம்யூனிஸ்டு என்று குறிப்பிட நேருமபோது எந்த கம்யூனிஸ்டு கட்சி? என்பதை விளக்க, துணைச் சொற்கள் சிலவற்றின் துணையையும் பெற்றாக வேண்டியிருக்கிறது. இடது என்றோ, வலது என்றோ, தீவிரம் என்றோ சேர்த்துச் சொல்லவேண்டிய சங்கடத்தை நமக்கு அவர்கள் தந்திருந்தாலும், அதனைச் சங்கடம் என்று கருதாமல், சலிப்பில்லாமல் சேர்த்துக் கொள்ளும் போது வலது கம்யூனிஸ்டுகளின் போராட்டம் என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது.

நண்பா, வலது கம்யூனிஸ்டு கட்சிக்கு மட்டுந்தானா விவசாயிகளின்மீது அக்கறை? இடது கம்யூனிஸ்டுகளுக்குக் கிடையாதா? தீவிரங்களுக்கு இதில் தித்திப்பு இல்லையா என்றெல்லாம் கேட்டு, உனக்குள்ளேயே ஒருவித சிரிப்புச் சிரித்துக் கொள்வதை என்னால் உணர முடிகிறது.

ஆனால் சிரிப்பதற்கு மட்டுமே உள்ள பிரச்னை அல்ல இது. சிந்திக்கவும் வேண்டும்; சீரிய முறையில் செயல்படவும் வேண்டும்.

"நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வேண்டும்." என்ற கம்யூனிஸ்டு நண்பர்களது முழக்கத்திலே இன்பம் மட்டுமல்ல—நாட்டு நலனும் பொதிந்திருக்கத்தான் செய்கிறது.

விவசாயிக்கு நிலம் கொடுக்கக்கூடாது என்று தடுக்கின்ற ஒரு ஆட்சியை நாம் பெற்றிருக்கும்போது, அந்த இன்பம் இன்னும் பல மடங்கு பெரிதாகவும் இருக்கும். தமிழகத்தின் நிலை என்ன? அப்படித் தடுக்கின்ற ஆட்சியையா நாடு பெற்றிருக்கிறது? இல்லையே!

விவசாயத் தொழிலாளர்க்கு நிலம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை, தமிழ் நாட்டில் வலதுசாரிகள் மட்டுமே எழுப்பி இருக்கிறார்கள்.

ஆனால் கேரளாவில், இந்தக் குரலை இடதுசாரிகள் எழுப்பினார்கள். போராட்டம் கூட நடத்தினார்கள்.

தீவிரங்களுக்கு வேறுவேலைகள் இருப்பதனால் இதிலே கவனம் செலுத்த நேரமற்றிருக்கின்றன!

எந்த மாநிலத்திலும் இடதுசாரிகள், இப்படியொரு போராட்டத்துக்கு நாள் குறிக்கவில்லை. இதனால் நிலப்போராட்டத்திலோ, விவசாயிகளுக்கு நிலம் வேண்டும் என்பதிலோ அவர்களுக்கு அக்கறை இல்லை என்ற பொருளா?

இதுபோல் நாமும் விமர்சிக்கக்கூடாது. அவர்களும் இப்படியான விமர்சனத்துக்கு இடந்தரக்கூடாது!

அதனால் நிலப் போராட்டம் பற்றிய விஷயத்தில் தத்தம் கருத்துக்களை இந்த நேரத்தில் நாட்டின் முன் வைப்பது மிகப் பொருத்தமுடையதாக இருக்கும்!

வலது கம்யூனிஸ்டு நண்பர்களின் அறிவிப்புப்படி, நிலமில்லாதவிவசாயிகளுக்கு நிலம்கோரி போராட்டம். அத்துடன் ஆகஸ்ட் 15-ல், அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களிலும் தனியாரது நிலங்களிலும், வலது கம்யூனிஸ்டு கட்சியினர் விவசாயிகளின் பேரால் சென்றமர்ந்துகொண்டு ஆக்கிரமிப்புச் செய்து கொள்ளப் போகிறார்கள்.

கடந்த 23 ஆண்டுகளாக இதற்காகக் குரலெழுப்பி, குரலெழுப்பி ஓய்ந்துபோன பின்பு, இனிப் பொறுக்கமுடியாது; மகனே பொங்கியெழு என்று போராட்டம் தொடங்கி விட்டார்கள், வரவேற்க வேண்டியதில்லையா அதனை!

நண்பா, இந்தியத் துணைக்கண்டமே ஒரு விவசாய நாடு என்று கூறிவந்தனர். இப்போது தொழில் மயமாகிக் கொண்டிருப்பதாகவும் கூறுகிறார்கள். குடிமக்களில் 80 விழுக்காட்டினர் விவசாயக் குடியினர்தான்.

கம்யூனிஸ்டுகளது இந்தப் போராட்டத்

தூக்கு நியாயமாக இந்த 80 விழுக்காடு மக்களும் ஆதரவு காட்டித் தீரவேண்டுமே!

ஆதரவு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், உனக்கும், எனக்கும் மட்டுமல்ல, ஆகஸ்ட் போராட்டத்துக்குப்பின் இந்த எண்பது சதவீத மக்களுக்கும் நிலப்பட்டா கிடைத்துத் தீரவேண்டும்!

விவசாயிகள் என்போர், கம்யூனிஸ்டு கட்சியின் விளக்கப்படி, இந்தப் போராட்டத்தில் பங்கேற்க இருப்பவர்கள் மட்டுமல்ல—ஆக்கிரமிப்புப் போரில், நிலத்தில்சென்று அமர்ந்துகொண்டோ, வேலிக்கட்டிக் கொண்டு, ஏரும், கலப்பையுங்கொண்டு உழுது கொண்டோ இருப்பவர்கள் மட்டுமல்ல—நீயும் நானும் கூடத்தான் என்பதையும் அந்தக் கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு எடுத்துக்காட்டவேண்டும். என் முன்னோர் சொந்தத்தில் நிலம் வைத்துக்கொண்டு, சில கூலியாட்களின் உதவியுடன் சாகுபடி செய்து வந்தவர்கள் தான்! காலம், அந்த நிலத்தை இன்னொருவருக்கு உடைமையாக்கிக் கொடுத்துவிட்டது. இந்த வரலாறு தானே நண்பா, உனக்கும்! போகட்டும்!

இந்தப் போராட்டம், விவசாயிகளுக்கு நிலம் வாங்கிக்கொடுப்பதற்கு மட்டுந்தானா?

அல்லது, வீடில்லாதவர்களுக்கு வீட்டுமனைகள் வாங்கிக் கொடுக்கவுமா?

மனையும் நிலமும் பெற்றுக்கொடுத்து, விவசாயத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டுவதா?

விவசாயித் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு கிடைக்கவேண்டும் என்பதிலே உனக்கும் சரி, எனக்கும் சரி, நாட்டின் பொதுவாழ்வில் அக்கறை கொண்டிருக்கும் அனைவருக்குமே ஆட்சேபனை இருக்க முடியாது. இதுபோலவே நிலமில்லாத ஏழை உழவர்களுக்குக் கொஞ்சம் நிலம் தனியுடைமை ஆவதனையும் யாரும் தடுப்பவர்கள் இங்கே இல்லை.

ஆனால் நண்பா! நிலமில்லாத அனைவருக்கும் நிலம் பெற்றுக் கொடுப்பதற்காக அல்ல, வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆகஸ்டுப் போராட்டம்.

நிலமில்லாத விவசாயிகளுக்கு மட்டும்கூட அல்ல இந்தப் போராட்டம்.

வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் விவசாய அணியில் இருக்கிறார்களே அந்த சில விவசாயத் தோழர்களுக்குக்கூட முழுமையும் இல்லை.

ஆனால் யாருக்காக?

ஒட்டு மொத்தமாகக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பேரால் யார் யார் எங்கெங்கே எதெதனை ஆக்கிரமித்துக்கொள்கிறார்களோ அவர்களுக்கு மட்டுந்தான் என்பது குறிப்பிடத் தக்கதில்லையா?

இப்படி எவரும் எந்த அறிக்கையிலும் குறிப்பிடவில்லையென்றாலும், நிலப் போராட்டத்தின் கருத்தும், இதயமும் இதுதானே!

அதாவது கம்யூனிஸ்டுகளுக்கும் நிலப் பட்டாவில் பங்கு வேண்டும் என்பதுதானே தேடிக்கிடைத்துப் பெறுகின்ற பொருள்!

இடதானாலும், வலதானாலும், மொத்தத்தில் அதன் கொள்கை, நிலமில்லாத ஏழை விவசாயப் பெருங்குடித் தோழர்களுக்கு, நிலம் உடைமையாக இருக்கவேண்டும் என்பதுதான்! ரஷ்ய நாட்டிலே புரட்சியேற்பட்டு பின்னால் நிலமற்றோருக்கு நாட்டின் நிலமனைத்தும் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டபோது, நண்பா நாட்டின் உழுநிலப் பரப்பில் 5ல் ஒரு பாகம் மட்டுமே நிலப் பிரபுக்களிடம் இருந்ததென்கிறது வரலாறு. அந்த 20 சதவீத பகுதியும் சிலபேரிடம் மட்டுமே இருந்ததாம்!

புரட்சியேற்பட்டு, அந்தச் சிலபேரும் அரசின் சட்ட திட்டத்தாலும், போர் ஆயுதங்களாலும் நிலவுடைமையைப் பறிகொடுத்துவிட்ட பின்பு—எந்த விதமான ஈட்டுத் தொகையும் கொடுக்கப்படாமலேயே—உயிர் உட்பட அனைத்தையும் இழந்துவிட்ட பின்னர், நிலங்களை விவசாயக் குடியினருக்கு உரிமையாக்குவதிலே இடையூறு ஒன்றும் ஏற்படவில்லை,

ஒன்றை உணர்ந்துகொள்வது நல்லது நண்பா, ரஷ்யப் புரட்சிக்கான பிரச்சாரத்தின் முக்கியப் பகுதியாக ' நிலம்'' இடம்பற்றி இருந்தது! அதே நேரத்தில், முதலாளித்துவ பிடிப்பும், பிணைப்பும் முழுதாக ஒழிக்கப்பட, நிலப்பிரபுத்துவத்தின் நச்சுவேர் நசுக்கப்பட நிலப் பறிமுதலும் தேவைப்பட்டது.

இந்த தேவைகளையெல்லாம் நிறைவு செய்து கொள்ள நேர்ந்தபோது—பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் மூலம், புரட்சி அரசாங்கத்தைக் காப்பாற்றித் தீரவேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டிருந்தது.

புரட்சி அரசாங்கம், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசு நாடுகளின் பலமான தாக்குதலுக்கு ஆளாகியிருந்த நேரத்தில், உள்நாட்டில் அதனைக் காத்துத்தீர உள்நாட்டு மக்கள் அனைத்துப் பகுதியின் ஒத்துழைப்பும் தேவையிருந்தது

விவசாயக்குடி மக்களுக்கு விவசாய நிலம் உடைமையாக்கப்பட வேண்டியேற்பட்டது.

தொழில் நிறுவனங்கள், தொழிலாளர் வசமே ஒப்படைக்கப்பட வேண்டியிருந்தது.

எல்லாம் புரட்சிக்குப் பிறகுதான்! ஒப்படைக்கப்பட்ட நிலங்கள் பல்வேறு காரணங்களால் பரிவர்த்தனை செய்யப்பட்டதும் உண்டு. தொழிலகங்கள் மாறுபாடு அடைந்ததும் உண்டு. கம்யூனிசத் தத்துவப்படி, அனைத்தும் அனைவருக்கும். அதன்படிதான் அங்கே பரிமாற்றங்கள் நிகழ்ந்தன — கொள்கைப்படி சில; நிர்ப்பந்தம் காரணமாகச் சில.

லெனின் தந்தபுதிய பொருளாதாரக் கொள்கைகள் இந்த முழக்கங்களையும், இலட்சியங்களையும் ஈன்றுதந்தன.

ஆனால் நண்பா. இதனாலேயும்கூட விவசாயிகள் வாழ்வு மலர்ந்துவிடவில்லை நிலம் விவசாயிகளுக்கு உரிமையாக்கப்பட்ட பின்பும்கூட அவர்கள் வாழ்வு துலங்கவில்லை. கட்சிச் சித்தாந்தங்களில் குறிப்பிடத்தக்க சில மாற்றங்களை மேற்கொண்ட பின்புதான் விவசாய அரங்கிலே, விவசாயத் தொழிலாளர்களது போராட்டம் மட்டுப்பட்டது—கட்டுப்பட்டது!

எனவே நண்பா நிலமில்லாதோருக்கு நிலம் என்பது கட்சிச் சித்தாந்தம் — இரஷ்யாவில்! இங்கும் இனிக்கும் ஒரு சித்தாந்தம்தான்!

ஆனால், தமிழ் நாட்டின் நிலையை மட்டும் எடுத்துக்கொள்.

நிலப் பிரபுக்கள் என்று நண்பர்களால் வருணிக்கப்படும் பெரும் நிலவுடைமையாளர்கள் எத்தனைப் பேர்?

அவர்களிடம் எத்தனை ஆயிரம் ஏகராக்கள் முடங்கிக் கிடக்கின்றன?

முடக்கப்பட்ட நிலம், அவற்றின் வருவாய் எந்த வகையில், அவர்களைச் சென்றடைகிறது?

விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய சில பேர்களே நம் மாநிலத்தில் நிலப் பிரபுக்கள்,

காங்கிரசாட்சியின் தில்லு முல்லுகள் காரணமாக, மொத்தமான நிலப்பரப்பை, துண்டு துண்டாக்கி, பல பேரின் பேரால் பட்டா ஆக்கிக்கொண்டு சுகவாழ்வு நடத்துகிறார்கள்—மன்ருடியார்களைப்போல்!

கண்டிக்கப்பட வேண்டியதுதான் இது. ஆனால் இந்த நிலவுடைமையாளர்களது நிலப் பிடிப்பைப் பறிமுதல் செய்துகொள்வதற்காக ஒரு ஆக்கிரமிப்புப் போராட்டம் தேவையா?

எந்த நிலவுடைமையாளரும் 15 ஸ்டாண்டர்டு ஏகருக்கு மேல் நிலம் வைத்திருக்கக்கூடாது என்று இந்த 1970-ல்தான் நமது அரசு சட்டம் கொண்டு வந்திருக்கிறது.

தமிழக அரசால் கொண்டுவரப்பட்ட சட்டத்திலே கம்யூனிஸ்டு கட்சிக்கு முழுத் திருப்தி இல்லை. அதற்காக என்ன செய்யவேண்டும்?

நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் திருத்தவும், தேவையான மாற்றங்களைக் கோரியும் அல்லவா போராட்டம் தொடங்கவேண்டும்?

தமிழக அரசு, முன்யோசனையுடனேயே, தேவையான மாற்றங்களைக் கொஞ்ச கால அனுபவத்திற்குப் பிறகு தேவையான அளவு செய்து கொள்ளலாம் என்றும்கூட அறிவிப்புக் கொடுத்திருக்கிறதே! இந்த வித போராட்டத்துக்குக்கூட இடம் தரவில்லையே அரசு!

அரசின் நிலங்களை மட்டும் ஆக்கிரமிப்புச் செய்து கொள்ளலாமாம்! சட்டம் குறுக்கிட முடியாதாம்! விளக்கம் தருகிறார்கள் நண்பர்கள்.

1967ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர் நண்பா, 2,30,000 ஏக்கருக்கு நிலப் பட்டாக்கள் தரப்பட்டிருக்கின்றன; 94 472 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் 1,03 361 குடும்பங்கள் நம் நாட்டில் பயனடைந்திருக்கின்றன.

இது போதுமானதுதான் என்று யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அரசுக்கு பட்டா வழங்குவது ஒன்றுதான் பணியென்றால் அரசிடமுள்ள விநியோகிக்கத்தக்க—விநியோகிக்கக்கூடிய அனைத்து நிலங்களையும் வழங்கிவிட்டிருக்கும்.

ஆயிரக்கணக்கான பிரச்னைகளுக் கிடையேதானே நண்பா. இந்தப் பணியையும் செய்யவேண்டியிருக்கிறது. காலதாமதம் ஆகலாம்! இன்னும் பல்லாயிரக்கணக்கான பேருக்கு 1972க்குள் இருவகைப் பட்டாக்களும் வழங்கப்பட்டுவிடும் என்று முதலமைச்சர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்.

நண்பா, இதுவரையிலே நிலப் பட்டாக்கள் பெற்றிருப்பவர்களில் எவரும் விவசாயிகளே இல்லையா? நிலமில்லாத ஏழைப் பாட்டாளி யாருக்கும் வழங்கப்படவில்லையா? வீட்டு மனைப் பட்டாக்கள் பெற்றிருக்கும் அவர்கள், யாருக்கும் தெரியாமல் வீடுகள் வைத்திருக்கிறார்களா? அவர்களில் காங்கிரசுக்காரர்கள் இல்லையா? கம்யூனிஸ்டுகள் இல்லையா? எந்தக் கட்சியையும் சாராதவர்கள் ஆயிரமாயிரவர் இல்லையா? காங்கிரஸ்காரர்கள் கூடத்தான் வீட்டு மனைகளும், நிலப்பட்டாக்களும் வழங்கி இருக்கிறார்கள். வழங்கப் பெற்றவர்களில் 90 சத வீதத்திற்கு மேற்பட்டவர்கள் காங்கிரசுக்காரர்களாகவேதான் இருந்தார்கள். ஆனால் நண்பா, அவர்கள் காங்கிரசுக்காரர்களே யானாலும், மற்றவர்களைப் போலவே நிலமேதுமில்லாதவர்கள் அல்லவா! குடிசை போட்டுக் கொள்ளக்கூட கொஞ்சம் இடம் சொந்தத்தில் இல்லாதிருந்தவர்கள் அல்லவா! காங்கிரசுக்காரர்கள் என்பதற்காக அரசாங்கம் தரும் அந்த உதவிகளைப் பெறக்கூடாது என்பது தண்டனையா என்ன?

அங்கொன்றும் இங்கொன்றுமாக ஊரை அடித்து உலையில் போடும் உலுத்தர்கள் சிலரும்கூட இதிலே பங்கு பெற்றிருக்கக்கூடும். அதெல்லாம் சட்டத்தின் ஓட்டைகள் காட்டிய வழிகளாகவுமிருக்கக் கூடும். அதற்காகப் பெரும்பான்மையினர் இந்த சலுகையினைப் பெறக்கூடாதா?

அதைப்போலவேதான் நண்பா, நம் அரசு வழங்கி இருக்கும் பட்டாக்களிலும் சிலபேர் கழகத் தோழர்களாக இருக்கக்கூடும். கடந்த 22 ஆண்டுக்காலத்தில் கழகத்தை அரசுக் கட்டிலிலேற்ற அரும்பாடுபட்டவர்களாகக்கூட அவர்கள் இருக்கலாம். கழகத்திலே இருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் இந்த அரசாங்கச் சலுகையினைப் பெறக் கூடாதா?

நண்பா, கலைஞர் அவர்கள் கூறிய செய்தியொன்றுக்கு மறுப்புக்கூற வந்த 'ஜனசக்தி" கூறுகிறது.

> 1970 ஜனவரி முதல் மே மாதம் முடிய ஒரு லட்சம் வீட்டு மனைகளுக்குப் பட்டா வழங்கி இருக்கிறது;
>
> திருச்சூர் எர்ணாகுளம், கோட்டயம், திருவனந்தபுரம், கொய்லோன் மாவட்டங்களில் மட்டும் 5000 ஏக்கர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
>
> அரசுக்குச் சொந்தமான நிலங்களில் பயிரிட்டு வருகின்ற நான்கு லட்சம் விவசாயிகளுக்குப் பட்டா வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் பத்தாயிரம் குடும்பங்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன.

கேரள அரசு, செய்துள்ள நிலப் புரட்சிக்குப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளது ஜனசக்தி.

நாம் கேட்போம் நண்பா, ஒரு லட்சம் வீட்டு மனைக்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டுள்ளதில் கம்யூனிஸ்டுகள் எத்தனைப் பேர்? அதிகாரபூர்வமற்ற அங்கத்தினர்களாக, அனுதாபிகளாக இருப்போர் எத்தனை பேர் எந்தக் கட்சியையும் சாராதவர்கள் எத்தனைப்பேர்?

இதைப் போலவே, ஐந்து மாவட்டங்களில் 5000 ஏகர் உழுநிலங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளதில் கட்சிக்காரர்கள் எத்தனைப் பேர்? கட்சிச் சார்பற்றவர்கள் எத்தனைப்பேர்?

இதிலே இன்னொரு வினாவும் தொக்கி நிற்கிறதைக் கவனி நண்பா! 5000 ஏகராக்கள் வழங்கப்பட்டுள்ளன—ஐந்து மாவட்டங்களிலுமாக, 5000 ஏகரா நிலம் மட்டுமே தேவையானவர்கள்தான இருக்கிறார்களா? அல்லது அரசாங்கத்தால் அவ்வளவுதான் தரமுடிந்ததா? இனியும் தரப்படவிருக்கிறதா? 5000 ஏகராக்களும் எத்தனைக் குடும்பங்களுக்கு?

[13-ம் பக்கம் பார்க்க]

# கடமை!

புகழென்னும் மாளிகையின் ஏணி—வெற்றி
புரிசெல்ல நாமமைத்த புதிய பாதை
திகழ்கின்ற நடைமுறையில் இன்பம் நல்கும்
தெவிட்டாத தேனமுதம்; உணர்வின் உச்சி
அகவூற்றில் சுரக்கின்ற உணர்ச்சி. என்றும்
அழியாத பெருமைதரும் சக்தி; ஆண்பெண்
அகத்துள்ளே காதல்தான் பெரிதா? இல்லை
அருங்கடமை பெரிதென்றே சொல்வர் ஆன்றோர்!

மக்களினம் முழுமைக்கும் கடமை யுண்டு
மாறாத அவ்வுணர்வே புவியி யக்கும்
சக்கரம்போல் சுழல்கின்ற உலகந் தன்னில்
சரியான அச்சாகும் கடமை தானே
தக்கபடி கடமையினை ஆற்றா விட்டால்
தனிமனித வாழ்விலன்றி சமுதா யத்தில்
சிக்கலெனும் வலைவிரித்தே சீர்மை குன்றும்
சிதைந்திட்ட சித்திரத்தில் அழகா தோன்றும்?

பெற்றோர்க்கும் பெருங்கடமை யுண்டு பள்ளி
படிக்கின்ற மாணவர்க்கும் கடமை யுண்டு
கற்றுதரும் ஆசிரியர் தமக்கும் உண்டாம்
கண்ணான மொழிகாக்கும் கடமை எல்லா
வற்றிற்கும் மேலாக உண்டாம் நாட்டை
வாழ்விக்கும் கடமைதான் ஆட்சிக் குண்டே
மற்றவர்க்கும் சிறப்பான கடமை உண்டு
மனிதகுல நீதிவழி செல்ல வேண்டும்!

விண்மீதில் தினமெழுந்தே மேதி னிக்கு
விளங்குமெழில் ஒளிபாய்ச்சும் கதிரோன் செய்கை
மண்மீதில் வாழ்வோர்க்கு நல்ல பாடம்
மனிதகுலம் பின்பற்ற வேண்டும் என்றும்
பண்பாடும் தேனருவி, பசுமைப் பூங்கா
பறவையினம், பாய்கின்ற ஆறும், காலம்
முன்பின்னாய் மாறுகின்ற காட்சி யாவும்
மாறாத இயற்கையதன் கடமை காட்டும்!

மூன்றெழுத்தில் சிறப்புண்டாம் சிந்தை வாழும்
மூத்ததமிழ் புகழ்,வெற்றி கல்வி அன்பும்
ஈன்றெடுத்த அன்னைக்கும் மூன்றெ ழுத்தே
இந்நாட்டார் இதயத்தே வாழும் அண்ணா
தேன்சுவையைத் தருகின்ற கவிதை, நெஞ்சு
தேடுகின்ற காதலுக்கும், உரிமை, வாழ்வு
போன்றபல சொற்களுக்கும் உள்ள தேபோல்
பொறுப்பான கடமைக்கும் மூன்றெ ழுத்தாம்!

"கடமையினைச் செய்தபின்பே உரிமை கேட்பீர்"
கல்யாண சுந்தரனார் இதனைச் சொன்னார்
உடையார்முன் உழைப்பாளி மட்டு மின்றி
உலகில்வாழ் மாந்தர்க்கெலாம் சென்ன சொல்லாம்
நட்புசெய்தே நீர்ப்பாய்ச்சும் பணிசெய் யாமல்
நல்விளைச்சல் காண்பதெங்கே? இதனைப் போலக்
கடமையினைச் செய்யாமல் உரிமை மட்டும்!
காணலெங்கே? சிந்திப்பீர்; முடிவு காண்பீர்!

—ப. கதிரவன்



# அறைகூவலை ஏற்போம்!



பல்கலைக் கழகத் துணைவேந்தர்

நெ. து. சுந்தரவடிவேலு

ஆசிரியரே கல்வியின் உயிர்நாடி. ஆசிரியர்நிலையே கல்வியின் நிலையும். ஆசிரியரிடம் அறிவொளி வீசினால் அவரிடம் பெறும் கல்வியும் அறிவொளி வீசும். ஆசிரியருக்குச் செயல்திறன் இருந்தால், அவரிடம் பயிலும் மாணவர்க்கும் செயல்திறன் வளரும். ஆசிரியர் தன்னடக்கம் உடையவரானால் மாணவர்க்கும் தன்னடக்கம் வளரும். ஆசிரியர் ஆர்வமுடையவரானால் மாணவரும் ஆர்வமுடையவராவார். சுருங்கக்கூறின் ஆசிரியரைப் பொறுத்தே, கல்வியும், மாணவரும் நாட்டின் எதிர்காலமும் அமையும். எனவே, ஆசிரியர், நன்னிலையில், நல்லார்வத்தில், நற்சிந்தனையில், மக்கட் பண்பில் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இது பலரது பொறுப்பு; பல துறையினரின் பொறுப்பு; சமுதாயம் முழுமைக்குமான பொறுப்பு.

ஆசிரியர் தொழிலில் வாழ்க்கைக்குப் போதிய வருவாய் கிடைக்கவேண்டும். பள்ளிக்கூடத்திற்கு அப்பாலும் வேலை தேடத் தேவையில்லாத அளவு நல்ல சம்பளம் கிடைக்கவேண்டும். ஆசிரியரைப் போன்ற தகுதியுடையவருக்குப் பிற துறைகளில் கிடைக்கும் சம்பள விகிதத்தைவிடக் கூடுதலான சம்பள அமைப்புத் தேவை ஆசிரியர் தொழிலுக்கு முன்பயிற்சி கேட்கப் படுகிறது. முன்பயிற்சி தேவையில்லாத அலுவலில் சேர்ந்திருந்தால் பயிற்சிக் காலத்திற்குள் இரண்டொரு நிலை சம்பள உயர்வு பெற்றிருக்கக்கூடும். பதவி உயர்வு வாய்ப்புகளும் ஆசிரியர் தொழிலில் குறைவு. இக்குறைகளையெல்லாம் நிறைவு செய்யும் முறையில் ஆசிரியர் சம்பள விகிதத்தை அமைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்; நம்புகிறோம்; வேண்டுகிறோம்.

சம்பளக் கவர்ச்சியோடு வேலைப் பாதுகாப்பும், நினைத்தால் மாறுதல் என்கிற நிலைக்குறைப்பும், போதிய மதிப்பும் சேர்ந்தால், ஆசிரியர் தொழிலுக்கு அறிவாளிகள் வருவதோடு காலமெல்லாம் ஆர்வத்தோடு பணிபுரிவார்கள். ஆசிரியர்களுக்குப் போதிய மதிப்புக் கொடுக்க நம் சமுதாயம் கற்றுக்கொள்ளவேண்டும்.

பயிரைப் போற்றுவதும், வளர்ப்பதும், நேராநேரத்திற்கு நீர் பாய்ச்சுவதும், உரிய காலத்தில் உரமிடுவதும் தயையால் அல்ல; இரக்கத்தால் அல்ல; புண்ணியத்திற்காக அல்ல. பின் எதற்காக? விளைச்சலுக்காக. அதேபோல் கல்வி விளைச்சலை எவ்வளவு அதிகமாக விரும்புகிறோமோ அந்த அளவு நாம ஆசிரியர்களை மதிக்க, அவர்களுக்கு நல்ல ஊதியம் கொடுக்க, அவர்கள் அல்லலற்று அமைதியாக வாழ்ந்து பணிபுரியும் உரிமையைக் கொடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆசிரியத் தோழர்களுக்கு ஒரு சொல். அறவுரையல்ல; தோழமை மழலை.

“பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்.” செயற்கரிய செய்து பெரியவர்களாகவேண்டியவர்கள் நாமே. பெருமை பிறர் கொடையல்ல எனவே, எத்தகைய நெருக்கடியிலும், ஆத்திர மூட்டும் நிகழ்ச்சியிலும், நாகாக்கக் கற்றுக்கொள்வோம்.

> நிலையிற் றிரியாது அடங்கியான் தோற்றம்
> மலையினும் மாணப் பெரிது.

இது மயக்குப் பாவல்ல; பொய்யாமொழி. இதை மறத்தல் ஆகாது. என்றும், பெருநிலையிலிருந்து இறங்கி நடுத்தெருவிற்கு வரவேண்டாம். ஆட்சி உரிமையால் மட்டுமின்றி, செய்தொழிலாலும் இறைவர்களாக விளங்குகிற நாம் பிறர்வழியைப் பின்பற்றி ஆரவாரப் பாதையிலே செல்லவேண்டாமென்று உங்கள் முதற்றொண்டன் என்னும் உரிமைபற்றி வேண்டிக்கொள்ளுகிறேன்.

கல்வியின் தரத்தைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். தரம் என்ற சொல் திட்டவட்டமான குறிப்பல்ல. நீக்குப் போக்குடைய சொல். ஒரு மைல், ஒரு கிலோ மீட்டர் என்றால் எல்லாக் காலத்திற்கும் ஒரே அளவு. கல்வித்தரம் என்பதற்கு அத்தகைய திட்டவட்டமான என்றும் பொருந்தும் அளவில்லை. தரத்தைக் கவனியாமல் இருப்பதற்குச் சாக்குப் போக்கல்ல இவ் விளக்கம்.

பழங்காலத்தில் போக்குவரத்து வசதி குறைவு; தொடர்பு குறைவு; போட்டியும் குறைவு. எனவே, அந்தந்த நாட்டின் அறிவு வளர்ச்சியோ, அறியாமையோ அவ்வளவாக நெஞ்சில் உறுத்துவதில்லை; வாழ்வைப் பாதிப்பதில்லை. இன்றோ உலகின் எல்லா மூலைகளும் தொடர்பு கொண்டுள்ளன; நெடிப் பொழுதில் தொடர்பு கொள்கின்றன நாட்டுக்கு நாடு செல்லச் சில மணி போதும் இந்நிலையில் எந்நாடும் தனித்து இயங்க முடியவில்லை. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாமும் உலக நாடு

களோடு பலதுறைப் போட்டிகளில் சிக்கியுள்ளோம். உலகப் போட்டியைச் சமாளிக்க, முன்னே ஓடுபவர்கள் மேல் கண்வைக்க வேண்டும். முன்னணியிலுள்ள நாடுகளின் தரத்தை மனத்தில் கொண்டு திட்டமிட வேண்டும். அதை அடையும் முறையில் பாடத் திட்டங்களை அமைத்துக்கொள்ளவேண்டும். உச்ச பாடத்திட்டங்களே உச்சநிலைக்குச் சேர்த்துவிடாது. ஆசிரியர்களும் முன்னணி நாட்டு ஆசிரியர்களைப் போல், தங்கள் பயிற்சியினை அடுத்தடுத்துப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். தொழில் திறமையினையும் பாட அறிவினையும் தொடர்ந்து வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் சுமக்காத சுமையினை நாம் கடைசி வரை சுமந்தால், அவர்கள் தரத்தினை எப்படி எப்படிப் பிடிப்பது? நாம் எல்லா நிலையிலும் மொழியே கற்றுக் கொண்டிருக்கலாமா? கற்றுக்கொள்ளவேண்டுமென்றால் இப்போதிருப்பதுபோல், இலக்கியப் படிப்பா, வாழ்க்கைக்கான மொழியாற்றலா எது தேவை என்பதையும் சிந்திக்கவேண்டும்.

மற்றொரு சீரமைப்பும் விரைவில் தேவை. இன்றைய வகுப்புகள் மந்தைகளாக உள்ளன. இதற்கு வெட்கப்படத் தேவையில்லை. சிறு சிறு வகுப்புகளாகச் சிலர் படிப்பதா, மந்தை வகுப்புகளாகப் பலர் படிப்பதா, என்ற கேள்விக்கே குடியாட்சியில் இடமில்லை. எல்லோரும் கற்போம். இதுவே குடியாட்சியின் முதல் அடிப்படை. எல்லோரையும் கற்கவைக்கும் எந்நாட்டிலும், 'மந்தை வகுப்பு' ஓர் நிலையில் வந்தே தீரும். அதை நெருக்கடியான ஒரு கால கட்டத்திற்கு ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். ஆயினும் என்றைக்கும், நிலையாக ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. அப்படி ஏற்றுக் கொள்வது, பொதுமக்களுடைய குழந்தைகளின் கல்வியைப் பெரிதும் பாதிக்கும். பெரும் வகுப்பிலுள்ள மாணவர்களுக்குத் தனிக் கவனம் கிடைக்காது. இன்றைய மாணவர்களில் பலர், படிப்பறியாக் குடும்பத்தவர்கள். அவர்களுக்குத் தனிக் கவனம் தேவை; உடனடித் தேவை. இதற்கு ஒரு வழி செய்யவேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அதாவது வகுப்புப் பிரிவுகளை அதிகரிக்க வேண்டும். முப்பத்திரண்டாயிரம் தொடக்கப் பள்ளிகளிலும் இரண்டாயிரத்து ஐந்நூறு உயர்நிலைப் பள்ளிகளிலும் இதை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வர முடியுமென்பவன் கனவுலகத்தில் இருக்கவேண்டும். அத்தனைப் பள்ளிகளிலும், இச்சீரமைப்புச் செய்ய, ஐந்து, பத்து ஆண்டுகளாகலாம். ஆனால் அக்குறிக்கோளை நோக்கி முன்னேறி இப்போதே தொடங்கிவிட வேண்டும். ஆழ்ந்து ஆலோசித்து, முடிவு செய்த நேர் அடிப்படையில் சில பள்ளிகளிலாவது அதிகப்படியான ஆசிரியர்களை நியமித்து, கூடுதலான பிரிவுகளைக் கொடுத்து, கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும்.

தர உயர்விற்கு இன்றியமையாத இத்திட்டத்தை, வேலையில்லாத் திண்டாட்டக் குறைப்புத் திட்டத்தோடு இணைக்கலாம். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வேலையில்லாத் திண்டாட்டக் குறைப்புத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாநிலத்திலும், ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களை நியமித்துக்கொள்ள இந்தியப் பேரரசு, மாநிலங்களுக்குத் தனி நிதி உதவியது. அந்நிதி உதவியால், நாம் எல்லா ஊர்களுக்கும் தொடக்கப் பள்ளி கொடுக்க உதவிற்று.

இன்று நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்துள்ளது. இந்நெருக்கடியை மேலும் முற்றவிடக் கூடாது. இதைக் கவனியாது விட்டுவைப்பது, எரிமலையின்மேல் நிலாச்சோறு உண்டு மகிழ்வது போலாகும். 'பட்டினி போட்டு வதைக்கும்' இந்த நாட்டைப் பற்றி எனக்கென்ன கவலை. இது எந்நாட்டவர் கையில் இருந்தால் எனக்கென்ன' என்னும் உணர்ச்சி. இளைஞர்களிடையே வேரூன்றுவதற்கு முன், விரைந்து பரிகாரம் காணவேண்டும். இந்தியப் பேரரசு, முன்புபோல், இப்போதும் வேலையில்லாத் திண்டாட்ட ஒழிப்புக்காகத் தனித் திட்டம் தீட்டவேண்டும். அதற்காக, மாற்ற முடியாத நிதி ஒதுக்கவேண்டும். அதன் பகுதியாக, அதிகப்படியான, ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளப் பண உதவி செய்ய வேண்டும். இத்தகைய திட்டம் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும்; அதே நேரத்தில் தரமான கல்வி கற்பிக்கத் துணைபுரியும். முன்னர் முடியாதவற்றையெல்லாம் எளிதில் முடித்து வைத்துள்ள நம் கலைஞர் ஆட்சி முன்வந்து இந்தியப் பேரரசிடம் இத்தகைய திட்டத்தை வற்புறுத்தினால் வெற்றி உறுதி. வேலை பெருகும். தரம் வளரும், தமிழ நாட்டின் ஆட்சிக்கு இக்கருத்தைப் படைக்கிறேன்.

கடைசியாக மற்றொன்றை உங்கள்முன் படைக்க விரும்புகிறேன்.

நீங்களும் நானும் கற்றவர்கள். நம்மளவு கல்வி வாய்ப்புப் பெற்றவர்கள் விழுக்காடு குறைவு. சமுதாயம் நம்மைக் காத்தது; காக்கிறது; இனியும் காக்க வேண்டாமா? சமுதாயம் நமக்காக உழைத்து, உணவளித்து, உடை கொடுத்து, இருக்கை தந்து, போற்றிவைத்திருக்கிறது. சமுதாயம் நம் கல்விக்காக, வரி கொடுத்து வந்துள்ளது.

நாம் படிக்க வரி கொடுத்த அண்ணன் நிலை என்ன? எழுதப் படிக்கத் தெரியாது. தம்பியின் நிலையும் அதே. தாயின் நிலையைக் கேட்பானேன்! நம் தமிழ் மக்கள், நம்மோடு வாழும் மக்கள். நமக்காக உழைக்கும் மக்கள், நம்மைக் காக்கும் மக்கள், நம் கல்விக்காக வரிகொடுத்த மக்கள் தற்குறிகளாக இருக்கலாமா? இது தமிழ் மக்களின் தன்மானத்திற்கு அறைகூவல் அல்லவா?

ஏற்போம் வாரீர் இவ்வறைகூவலை. மராட்டியர்கள் முந்திவிட்டார்கள் முதியோர் எழுத்தறிவு இயக்கத்தில். இனியும் தயங்காதீர். தோழர்களே! எழுத்தறியாதவர் ஏமாளிதானே? அவரை அறிவாளியாக்குவது நம் கடமை அல்லவா? நன்றிக் கடன் அல்லவா? நம்மை வாழவைக்கும் அவருக்கு நாம் செய்யக்கூடிய சிறு கைம்மாறு அவருக்கு எழுத்தறிவூட்டல்

எழுத்தறிவூட்டும் சோதனை, அண்மையில் நம் மாநிலத்தில் நடந்தது. அது ஆகாத முயற்சி யல்ல. எளிதான முயற்சி; பயனுள்ள முயற்சியுங்கூட. நான்கு மாதங்கள் அதாவது எண்பது நாட்கள்—நாள்தோறும் ஓரிரு மணி பாடஞ் சொல்லிக் கொடுத்தால், போதிய செயல்நிலை. எழுத்தறிவு கொடுத்துவிடலாம். இதில் ஆசிரியத் தோழர்களைக் கவனஞ் செலுத்தும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். படித்த அனைவரையும் முதியோர் எழுத்தறிவு முயற்சியில் இறங்கும்படி வேண்டுகிறேன். உயர்நிலைப் பள்ளி வகுப்பு மாணவ

(15-ம் பக்கம் பார்க்க)

**இலக்கியம்:**

# பரிந்துணர மாட்டாத பாவை!

'நெருப்பு சுடும்; தொடாதே' என்று ஒரு குழந்தையிடம் சொன்னால் கேட்கிறதா? தொட்டுப் பார்க்கவேண்டும் என்ற உணர்ச்சியல்லவா அதனைத் தடுக்கின்ற நேரத்திலெல்லாம் குழந்தையின் உள்ளத்திலே வேர்விட்டுக்கொண்டிருக்கிறது! அது குழந்தை! கூறுபவைகள், அனைத்தையுமே புரிந்து, கொள்ள முடியாது. சுடும் என்று கூறும்போது, ஏதோ ஒன்று நிகழும் என்றுதான் புரிந்துகொள்கிறது. ஆனால் அந்தச் சூடு எப்படி இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமே! தொட்டுப் பார்த்துத்தானே புரிந்துகொள்ளவேண்டும். நம்முடைய கவனக் குறைவைப் பயன்படுத்திக்கொண்டு, என்றாவது ஒருநாள் தொட்டுவிடத்தான் செய்கிறது. 'சூடு' என்பதன் பொருளை—விளைவை குழந்தையும் புரிந்துகொள்கிறது! விளைவு காரணமாக நம்மையும் வேதனைக்காளாக்குகிறது.

கூடாது என்று தடுக்கப்படுவனவற்றில் அது தனக்கு வேண்டும் என்று ஆசைகொள்ளும் போக்கு குழந்தைகளுக்கு மட்டுமல்ல—பெரியவர்களுக்கும் கூடத்தான் இருக்கிறது. அச்சுறுத்தித் தடுக்க முடிந்தவைகளைத் தடுத்துவிடுகிறோம், தடுக்கப்படவேண்டியவர்களும் பெரியவர்கள்; தடுப்பவர்களும் பெரியவர்கள்! யார், யாரைத் தடுப்பது?

வேதனையும் விபரீதமும் இங்கிருந்தல்லவா ஆரம்பமாகிறது!

பூவாத்தாளின் மகள்தான் பொன்னுமணி. கண்ணைவிட அதிக கவனத்துடன்தான் அவளை வளர்த்தாள்! உணவு வகைகளின் மூலம், பொன்னுமணியின் உடலை வளர்த்தாள்! விரும்பிய அணி, மணிகளின் மூலம் அவள் அழகையும் வளர்த்துவிட்டாள்! அவளும் வளர்ந்தாள் அவள் அழகும் வளர்ந்தது. வளர்ச்சி என்பது இவ்வளவுதானா?

ஆண்டுகள் வளர்ந்தன; அதனால் அவள் வளர்ந்தாள்! அவள் வளர்ந்தாள்; அதனால் அவளது அங்கங்களும் வளர்ந்தன; அதனால் அவள் அழகும் வளர்ந்தது! இவைகள் அனைத்தும் தத்தம் திறங்காட்டி வளர வளர—கூடவே அவளது உள்ளமும் அல்லவா வளர்ந்துவந்துவிட்டது! உள்ளத்தை வளர்த்துவிட்டது யார்? பூவாத்தாளா? பொன்னுமணியா? குறிப்பிட்ட அளவின் வளர்ச்சிக்குப் பூவாத்தாள் காரணமாக இருக்கலாம்! இன்னும் ஒரு அளவுக்குப் பொன்னுமணியும் காரணமாக இருக்கலாம்! பெரும் அளவுக்குக் காலமல்லவா "நான்தான் காரணம்!" என்று பங்கு கேட்டுக்கொண்டு வந்து முந்தி நிற்கிறது!

பொன்னுமணியின் உள்ளத்து வளர்ச்சிக்கு முழுக்காரணமும் பூவாத்தாள்தான் என்றால், அவளிடம் நமது மனக்குறையைக் கொட்டிவைக்கலாம்! பொன்னுமணியேதான் என்றாலும்கூட, நம் கோபத்தை அவள் பக்கம் திருப்பிவிடலாம்!

காலம்தான் காரணம் என்று எகிரிக்குதித்தல்லவா கும்மாளம போடுகிறது! எவர் சென்று கேட்க முடியும்? குழந்தையின் முன்னே

திருவாரூர் புத்துராமன்

தீயைக் கொட்டிவைத்தாயே ஏன் என்று எவர் சென்று காலத்திடம் கேட்பார்கள்? கேட்க முடியுமா அப்படி!

ஒருத்தியின் உள்ளம் வளர்ந்துவிட்டது என்றால் அதிலிருந்து எவ்வளவு பொருள்கொள்ள முடியும்?

• • •

"டேய் சிங்காரா! செம்மை வண்ணமே உன் மேனி வண்ணத்திடம் கண்டு கொண்டதுதான் என்று செம்மாந்து கூறுவாயே, பாரடா அந்தப் பொன்னுமணியை! அவள் மேனி வண்ணம் உன் வண்ணத்தைப்பழிக்கிறதடா! போ எங்கேனும் போய் தற்கொலை செய்துகொள்."

"போடா போ! பொன்னுமணி அழகிதான்! பூத்து மணம் பரப்பும் பாரிஜாதம் அவள். ரோஜாமலர், அவள் வண்ணங் கண்டு நாணும்! அதற்காக நான் ஏன் தற்கொலை செய்துகொள்ள வேண்டும்! அவள் அழகி என்றால், நான் அழகன்!"

"ஊம், அழகனாக இருந்தால் மட்டும் போதுமா? அந்த அழகியை எவன் வந்து கொத்திக்கொண்டுப் போகஇருக்கிறானோ?"

"அடே, உன்னால் மடல் ஏறமுடியுமா?"

"முடியாதே!"

"உன்னால் முடியாது! நம் ஊரில் உள்ள எத்தனைப் பேருக்கு அந்தத் துணிவு இருக்கிறது?"

"யாருக்கும் மடலேறும் துணிவு இருப்பதாகத் தெரியவில்லை."

"நிச்சயமாக அப்படித்தான்! வேலப்பன் இருக்கிறானே, சென்ற மாதம் வயல்வெளிக்கு மாடு கன்றுகளை ஓட்டிச் சென்றானாம்! இருபத்து இரண்டு வயது காளை அவன்! கேவலமாக இருக்கிறது. நரி ஒன்று வழி தவறி அங்கு வந்துவிட்டதாம்! வழி தவறி வந்த நரி, வாழ்வுப் போராட்டம்தானே நடத்தியிருக்கும்! தன் உயிரைக் காத்துக்கொண்டால் போதும் என்றல்லவா அந்த நரி எண்ணி இருக்கும்; ஒரு கல்லெடுத்து எறிந்திருந்தால்கூட ஓடிப் போயிருக்குமே! அதன் அவலத்தை எண்ணி அழுது ஊளையிட்டிருக்கிறத! அவ்வளவுதான். பழனத்தில் பிடித்த ஓட்டம், அவன் வீட்டுக்குள் வந்த பின்னர்தான் நின்றதாம்! சிரிப்பாயில்லையா கேட்க!"

"யார் சொன்னார்கள் உனக்கு!"

"யாரோ சொன்னார்கள்! வேலப்பனின் தங்கை போய்தான், மாடு கன்றுகளை ஓட்டிவந்தாளாம்! இன்னொரு வீரன் இருக்கிறானே, இரும்பிடையன்! அவன் சேதி தெரியுமா? ஆற்றுப் படுகையில் குளித்துக் கொண்டிருந்திருக்கிறான்! படுகையல்லவா அது. தேங்கிக்கிடக்கும் நீரில் பாம்பு, தவளை, மீன் வளர்ச்சியுறும் அல்லவா! பாம்புக்கூட அல்ல! ஒரு தவளை, தண்ணீரின் மேலே தலையை மட்டும் தூக்கி வைத்துக் கொண்டு, வாயைப் பிளந்து நீரருந்திக் கொண்டிருந்திருக்கிறது! இரும்பிடையின் கண்கள், அந்தக் காட்சியை எப்படிக் காட்டியதோ, அவ்வளவுதான்! கரையேறிய வேகம், காற்றைவிடக் கடிதாக இருந்ததாம்! வீட்டுக்கு வந்த வேகம், வேங்கையின் பாய்ச்சலைவிட வீறுடையதாம்!"

"நீ என்ன கதைகளைக் கற்பனை செய்துகொண்டிருக்கிறாயா?"

"அரசவைக்குப் போய்ப் பரிசுகள் பெற இருபது காதம் இடம் பெயர வேண்டுமே! பைத்தியக்காரா! நம் ஊர் இளைஞர்களின் சேதி இருக்கிறதடா இப்படியென்றால், நம்ப மறுக்கிறாய்! நாச்சியப்பனைப்பற்றிக் கூறினால், நீயே ஓட்டம் பிடித்து விடுவாய்!"

"சரி, சரி! இந்த ஊரில் உள்ள எவருக்கும் மடலேறும் போராண்மை இல்லை. உன் ஒருவனுக்குத்தான் இருக்கிறது; அதனால் அந்த அழகி பொன்னுமணி உனக்குத்தான் என்கிறாய்! அப்படித்தானே' வீண் கர்வத்தோடு இருக்கிறாய்! இந்த ஊரில் இல்லையானால், அக்கம் பக்கத்தில்கூட இல்லையென்றா பொருள்",

"பூவாத்தாளை எனக்குத் தெரியுமே! பொன்னுமணியைப் பிரிந்திருக்க முடியாது அவளால்! அதனால் எந்த ஊருக்கும் அவளை அனுப்ப பூவாத்தாள் ஒப்பமாட்டாள்!"

இளைஞர் கூட்டத்தின் ஒரு பகுதியில் இப்படிப்பட்ட பேச்சுக்கள் தொடங்கின. தொடங்கின என்றால் அதன் பின் இன்னும் எவ்வளவோ இருக்கிறதல்லவா! அவ்வளவும் நிகழத்தான் செய்தன! நாளும் நாளும் என்றிருந்து ஒவ்வொருவரும் இன்னொருவரைச் சந்திக்கும்போது என்றாகிவிட்டது அந்தத் தொடக்கம்.

• • •

"முல்லை! தெரியுமா சேதி! பொன்னுமணிக்கு உடம்பு சரியில்லையாமே!"

"சொன்னார்கள்! எனக்கென்னமோ, அது சரியான தகவலாயிருக்குமென்று தோன்றவில்லை."

"நீ என்ன முல்லை புதிர்போடுகிறாய்!"

"இல்லை! பொன்னுமணியின் உடம்புக்கு ஒன்றுமில்லை! உள்ளத்துக்குதான் ஏதோ தெரியவில்லை."

"மருத்துவர் அப்படிச் சொல்லவில்லையாமே."

"மருத்துவருக்கு என்ன தெரியும்? எப்படியாவது அவர் மருந்துகள் விலையாகவேண்டும்! மனநோய்க்கு ஏதடி மருந்து."

"ரொம்பவும் அனுபவப்பட்டவள் போலப் பேசுகிறாயே!"

"உனக்கு ஒன்றுமே தெரியாது! பச்சைக் குழந்தை நீ! அல்லி! பொன்னுமணியைப் பார்த்துப் பார்த்துப் பொறாமைப்பட்டோம்! அவள் நடந்துபோனால், அந்த அழகையேப் பார்த்து அப்படியே நின்றுவிடுவோமே! எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியும் எவ்வளவு லாவகமாக இருக்கும்! ஒரு நாட்டிய பாவனையே இருக்குமே அதிலே! ஒயிலான அசைவு! அந்த அசைவோடே நமது உள்ளமும் அசையுமே! ஆண்பிள்ளைகள் என்னதான் நினைக்கமாட்டார்கள்! அல்லி, போனவருஷம் நீ சொன்னாயே! நான் ஒரு ஆண்பிள்ளையாக இல்லாமல்போயிட்டேனே! ஆணாக இருந்திருந்தால் பொன்னுமணியோடக் காதலைப் பிச்சை கேட்டாவது பெறுவேன்னு சொன்னாயே மறந்துவிட்டாயா! அவள் அழகு அப்படிப்பட்டதாக இருந்தது! குணம்? அதைப் பற்றிஎனக்கு சொல்லத்தெரியலேடி! அப்படிப்பட்டவள் பொன்னுமணி! இன்றைக்கு எப்படி இருக்கிறாள் பார்த்தாயோ? உடம்பு நிறமே மாறிப்போய் விட்டதாம். தாழம்பூ மாதிரி வெளுத்துப்போய் விட்டாளாம். இதற்கு என்ன அர்த்தம்?

"பாவம் பொன்னுமணி! அழுது அழுது, கண்ணீரே வற்றிப்போயிருக்கும்!"

"தெரிகிறதல்லவா! மருத்துவரால் குணமாக்க முடியுமா? பூவாத்தாள்தான் வழி தேடணும்!"

"பொன்னுமணிக்கு வயதுக் கோளாறு என்பதுதான் உன் தீர்ப்பா?"

"பைத்தியக்காரி! பொன்னுமணியொத்த வயசுக்காரிங்களுக்கு எல்லாம் வருகிற வழக்கமான நோய் தானடி அது. அதுக்கு மருந்து, அதுதான்......!

• • •

பொன்னுமணியின் வளர்ச்சி ஊராரை இப்படியெல்லாம் விமர்சிக்கச் செய்ததில் பிழையேதுமில்லை, வெளிப்படையாகத் தெரிந்தவைகளைக் கொண்டு, வெளிப்படாத சிலவற்றை யூகங்களாக்கி, வெளிப்படுத்தத் தொடங்கினர்! அவர்களுக்குத் தெரிந்தது ஒன்று! தெரிந்த ஒன்றை வைத்துக் கொண்டு தெரியாதவைகளுக்கு உருவங் கற்பிக்க முடிந்ததன் பலன், எதிரொலி—பூவாத்தாளுக்கும் எட்டத்தான் செய்தது!

மகளைப் பார்த்து மனம் பூரித்து மகிழ்ந்த அவள், இப்போது மனதுக்குள்ளேயே குமுறத் தொடங்கினாள். ஊரின் வாய் உரைப்பது ஒரு வேளை உண்மையோ? காலத்தே நான் என் கடமையைச் செய்யாது விட்டு விட்டேனோ? என்று தனக்குள் பிதற்றத் தொடங்கிவிட்டாள்.

நடந்ததெல்லாம் நடந்து முடிந்து விட்டது. நோயுடன் படுக்கையில் வீழ்ந்து விட்டாள் மகள்! இனி என்ன நடக்க வேண்டும்?

திட்டவட்டமான முடிவுக்கு வர முடியவில்லை அவளால். பொன்னு

# அணையா? கணையா?

—[ஆலந்தூர் கோ. மோகனரங்கன்]—

நீயிருக்கும் இடமே நீலகிரி—உன்
நிழலிருக்கும் இடந்தான் காதல் புரி!
வாயிருந்தும் ஒருசொல் பிறக்கவில்லை—இன்னுமுன்
வண்ணமுகம் என்கண் மறக்கவில்லை!

நினைவிருக்கும் நெஞ்சில் உறவிருக்கும்—அது
நிலைத்திருந்தால் எனக்கும் உயிரிருக்கும்!
மனமிருந்தால் பேச மொழியிருக்கும்—நாம்
மணப்பதற்கும் உலகில் வழியிருக்கும்!

பிணக்கிருந்தால் காதல் மறைந்திருக்கும்—சற்றுப்
பிரிவிருந்தால் ஆவல் நிறைந்திருக்கும்!
கணக்கிருந்தால் நாளை செலவிருக்கும்—மனக்
கலப்பிருந்தால் இன்ப நிலவிருக்கும்!

உயிரிருந்தால் உன்றன் ஒலியிருக்கும்—நீ
உடனிருந்தால் மேலும் பொலிவிருக்கும்!
துயரிருந்தால் நேற்றே இருந்திருக்கும்—இன்றுன்
தொடர்பிருந்தால் அதற்கும் மருந்திருக்கும்!

துணையிருந்தால் எனக்கு நீயிருப்பாய்—அதில்
தோல்விவந்தால் இங்கே யாரிருப்பார்?
அணையிருந்தால் நீயே அணையாவாய்—இன்னும்
அகன்றிருந்தால் நீயே கணையாவாய்!

மணிக்கேற்ற காளை ஊரிலே யார் இருக்கிருர்கள் என்று ஆராய முற்பட்டுவிட்டாள். ஆனுலும் ஒரு சந்தேகம்! தன் முயற்சிகள் விணுகும் படியாக பொன்னுமணி எவனையாவது இதயத்தில் குடியேற்றி இருந்தால்?

கேட்டுத் தெரிந்து கொள்வதா? யூகத்தால் உணர்வதா? எதுவுமே இயலாததாக இருந்தது! பொன்னுமணி, தன்னைப் பாழ்படுத்திக்கொண்டிருக்கமாட்டாள் என்பது வேண்டுமானுல் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்கும். இதயத்தில் இடந்தந்திருக்கமாட்டாள் என்பதை ஏற்க முடியாது—அல்லது நிரூபிக்க முடியாதே!''

கிழப்பருவம்! வயதான அவளது உள்ளத்துக்கு இத்தனைத் தொல்லைகள் தரக்கூடாதுதான். யார்தந்தார்கள்? பொன்னுமணியா? ஊராரா?

இல்லாமல் புகையாது என்பார்கள். நெருப்பில் புகை இருக்கத்தான் வேண்டும்! அப்படியானுல்—ஐயோ பொன்னுமணி!

கிழவியின் சிந்தனை தொடர்பற்று போய்க்கொண்டிருந்தது.

பொன்னுமணிக்கும் அதுவேதனையாகத்தான் இருந்தது! படுக்கையிலிருந்து மெள்ள எழுந்தாள்! அன்பின் தெய்வமான அன்னையிடம் தடுமாறி நடந்துவந்தாள். கிழவி எழுந்து சென்று கைத்தாங்கலாக ஏந்தி அவளை மீண்டும் படுக்கையிலேயே கொண்டுசென்று படுக்கவைத்தாள். படுத்துக் கொண்டே சொல்லத் தொடங்கினுள் அந்தப் பாவை!

''அம்மா! ரொம்பவும் கஷ்டமா அம்மா!''

''இல்லை மகளே! ரொம்பவும் பெருமைப்படுகிறேன்''

''நானும் பெருமைதானம்மா பட வேண்டும்! ஆனுல்......ஆனுல்...''

''சொல் கண்ணே''

''கண்ணெழுதிப்பார்த்து காலம் பல ஆயிற்றல்லவா அம்மா''

எண்ணிப்பார்த்து அதற்காக வேதனைப்படுகிறேன் மகளே''

''நானும் வேதனைதானம்மா அனுபவிக்கிறேன்! என்னைப் பெற்று மகிழ்ந்ததைப்போலவே, நானும் மகிழ்ந்தேன் அம்மா அன்று...

''என்ன சொல்கிருய் மகளே! நீயும் பெற்ருயா? கன்னி விருதோடு நீயுமா பெற்ருய்?

''ஆமாம் அம்மா! நீ என்னைப் பெற்ருய்! நான் அவரை...ஆமாம் அம்மா...அவரைத்தான் பெருமையோடு சொல்வாயல்லவா! இந்த ஊரிலேயே மட்டேலறும் பேராண்மை அந்த ஒருவருக்குத்தான் உண்டு என்று. காளையின் கருவத்தைக் கொம்பிலேயே கட்டிப் போடும் காளை அவர் ஒருவர்தான் என்று நீ சொல்லிச் சொல்லிப் பெருமைப்படுத்துவாயே அம்மா சிங்காரத்தை, அவரைத்தான் நான் பெற்றேன் அம்மா!

''பைத்தியமா கண்ணு உனக்கு! என்ன உளறுகிருய். நீயா அவனைப் பெற்ருய்?''

''என்னம்மா இப்படிப் பேசுகிருய்? பெற்றேன் என்ற சொல்லுக்கு ஒரே ஒரு பொருள்தான் உனக்குத் தெரியுமா? அம்மா, நான் ஒரு நாள் அவரை, ஆற்றங்கரையில் எதிர்பாராமல் சந்தித்தேன அம்மா! என்றைக்குத் தெரியுமா அம்மா! இரண்டு திங்களுக்கு முன்பு ஒரு நாள், நீயே எனக்குத் தலைவாரி, மல்லிகைப் பூச்சூடி, தாழம்பூ தைத்து. கண் நிறைய மையெழுதிவிட்டு சீக்கிரம்போய் நீரெடுத்துவா கோயிலுக்குப் போய் வருவோம் என்று அனுப்பிஞயல்லவா அன்று தானம்மா, அம்பிகையின் சந்நிதிக்குள் நான் அடியெடுத்து வைக்கு முன்பு, அவர் என் இதய சந்நிதியில் அடியெடுத்து வைத்துவிட்டாரம்மா! அம்மா, இதனுல் இது விளையும் என்பதை உணரமாட்டாது அந்தக் காளையின் கருவமிக்க மேனியின்மீது ஒரே ஒருமுறை பார்வையை ஓடவிட்டு விட்டேனம்மா! அவ்வளவுதானம்மா எனக்குத் தெரியும்! என்னுள்ளே ஆயிரமாயிரம் அதிர்ச்சிகள் போராட்டங்கள்! அப்புறம் அடியெடுத்து வைக்கக் கூட என்னுல் முடியவில்லையம்மா வெகுநேரம் வரைக்கும்! அவரே என் அருகில் வந்து, வீட்டுக்குப் போய்வா! அம்மா தேடுவார்கள் என்று கூறுகிற வரைக்கும் நான் என்னை மறந்துதானம்மா இருந்தேன்! அதன் பிறகு, பல நாட்கள் நாங்கள் சந்தித்து இருக்கிருேம்! மையுண்ட என் கண்கள், பின் விளைவுகள் இப்படியெல்லாம் இருக்கும் என்பதை ஓர்ந்தறியாது, தெரிந்து உணரமாட்டாது, அவர்மீது பார்வையை ஓட்விட்டதல்லவா! அதன் பலன் தானம்மா இவையெல்லாம்! உன்னிடம் வந்து இதுபற்றிப்பேச விருந்தார் அம்மா அவர். அதற்குள் அவரை அவர் பெற்ருேர் அயலூருக்கு அனுப்பி விட்டார்கள் அம்மா! இன்னும் ஒரு திங்கள் ஆகும் அம்மா அவர்திரும்ப. இன்று என் கண்கள் துயரம் உழக்கின்றன! இந்தத் துயரங்களுக்குக் காரணம், அன்று தெரிந்துணரா நோக்கிய என் உண்கண்களல்லாவா அம்மா! அதனைப் பரிந்துணரமாட்டாது பைதலுறுவது ஏனம்மா? சொல்லம்மா!

''மகளே! மகளே! மனம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறது தெரியுமா! இப்படித்தான் நீ அவனைப் பெற்ருயா? உன் உடல் நோய்க்கும், மன நோய்க்கும் மருந்து அவன் தானு? கவலை விடு மகளே! காலம் கூடி விட்டதடி கண்ணே!''

''அம்மா! கோபமா அம்மா!''

''என்மீதே எனக்குக் கோபம் வருகிறது மகளே! நானல்லவா இதனை முன்பே அறிந்து ஆவன செய்திருக்க வேண்டும்!''

• • •

பூவாத்தாளுக்கும், பொன்னுமணிக்கும் நடைபெற்ற உரையாடல் காரணமாக பூவை மீண்டும் பொலிவு பெற்ருள் தாயின் அனுமதியும் கிடைத்துவிட்டது; அவனைப் பெற்ருேரும் இச்செய்தியை வரவேற்று மகிழ்ச்சிக் கூறிவிட்டார்கள். அப்புறம் என்ன?

நெருப்பு சுடும் என்பது அவளுக்குத் தெரியத்தான் செய்யும். என்ருலும் தொட்டுப் பார்த்துத்தான் தெளிவு பெற வேண்டியிருக்கிறது. விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் தானே சுடுகின்ற நெருப்பாயிற்றே அது! அவள் என்ன செய்வாள், பாவம்! பருவம் செய்த தவறல்லவா அது! காலம் விளைவித்த விபரீதமல்லவா அது!

உள்ளுக்குள்ளே மகிழ்வு பூத்தது. ஆனுல், அவளது மனம மறைவாக அந்தக் குறளை உச்சரித்துக் கொண்டே இருந்தது. அது இது:

''தெரிந்துணரா நோக்கிய
உண்கண் பரிந்துணராப்
பைதல் உழைப்ப தெவன்?

(1172

*

சமூக அமைப்பு மாற்றப்படவேண்டுமென்பதற்கான போராட்டங்கள் புதுப்புது வடிவமெடுக்கின்றன!

தனி மனிதர்கள்கூட சமூகத்தின் ஆணிவேரையே அறுத்துவிட முடியும் என்று முன்வருகிறார்கள்—

யார் அவர்கள்?

தத்துவமேதை

**T. K. சீனிவாசன், M. P.**

அவர்கள் படைக்கும்

**புதிய தொடர்கதையில் படிக்கப் போகிறீர்கள்!**

**12—7—70 முதல்**

**"காஞ்சி"யில் எதிர்பாருங்கள்.**

6-ம் பக்கத் தொடர்ச்சி

இப்படியெல்லாம் நாம் கேட்கக்கூடாதா?

நான்கு லட்சம் விவசாயிகளுக்குப் பட்டாக்கள் வழங்க முடிவெடுத்து, அதிலே பத்தாயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே இதுவரையில் பட்டாக்கள் வழங்கப்பட்டன என்றால், நண்பா மற்றவர்களுக்குப் பட்டாக்கள் வழங்குவதிலே காலதாமதம் ஏன்?

கேட்க முடியும் நம்மால். கேட்பதும் பாவகரமானதல்ல ஆனால் ஒரு அரசுப்பணி என்பதிலே அது முடிவுபெற எத்தனையோ கட்டங்கள் இருக்கின்றன அவைகளையெல்லாம் தாண்டித்தாண்டி செயல்படவேண்டியிருக்கின்றன. தாமதம் இந்த விதமாகத்தான் ஏற்படுகிறது என்பது நமக்குப் புரிகிறது அத்துடன் அந்த அரசுக்குப் பட்டா வழங்குவது மட்டுமே பணியாக இல்லை. இன்னும் எத்தனையோ வேலைகள்! கடமைகள்! காத்திருக்கின்றன. கவனம் செலுத்தித் தீரவேண்டும்.

இதுவரை தமிழ் நாட்டில்—94 472 வீட்டு மனைப் பட்டாக்களும், 2 30 000 ஏகராவுக்கு உழு நிலப் பட்டாக்களும், தரப்பட்டுவிட்டிருப்பதால் 1,03 361 குடும்பங்கள் பயனடைந்திருக்கின்றன.

பயனடைய வேண்டிய குடும்பங்கள் இன்னும் பல்லாயிரம் உண்டு அவற்றை 1972க்குள் பயன்படும்படிச் செய்யவும் திட்டமிட்டாகிவிட்டது.

தமிழக அரசுக்குச் சொந்தமான மக்களுக்குப் பகிர்ந்தளிக்கத் தக்க வகையில் உள்ள நிலத்தின் அளவு 4 84 000 ஏகராக்கள் இருக்கின்றன. இவற்றில் 1 69 000 ஏகரா அளவு எதற்கும் பயன்படுத்த முடியாது என்று நீக்கிவிட்டு, மீதியுள்ள 26 65 000 ஏகராக்களை ஏழைகளுக்கு 1972க்குள் தர முடிவெடுக்கப்பட்டு பணிகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன.

அரசு வழங்கும் நிலமனைத்தும் அரசுக்கே சொந்தமான நிலங்கள்; மனைகள், புறம்போக்கு, காட்டு நிலம் என்பன போன்றவை. இதைத்தானே அரசாங்கம் செய்ய முடியும்?

ரஷ்ய நாட்டைப்போல் மக்கள்தொகையில் 300-பேருக்கு ஒருவரைப் பலி கொடுத்து நிலப் புரட்சி செய்ய வேண்டும் என்கிறார்களா கம்யூனிஸ்டுகள்? வெளிப்படையாகக் கூறிவிடட்டும்! நாமும் தயாராகிக் கொள்வோம்!

புதிய நிலச் சட்டத்தின்படி, ஒருவர் 15 ஏகராவுக்கு மேல் வைத்துக்கொள்ள முடியாது என்று தடுத்திருப்பது எதைக் குறிக்கிறது? பெரும் பெரும் நிலப் பிரபுக்களை உற்பத்தி செய்கிறது என்பதுதான் இதன் பொருளா?

உருவாகிவிட்ட நிலப் பிரபுத்துவம், ஒழிக்கப்பட வேண்டியதுதான் என்பதிலே எவரும் கருத்து வேறுபாடு கொண்டிருக்கவில்லை.

நிலப் பிரபுத்துவம் ஒழிக்கப்பட வேண்டுமானால், குவிந்து கிடக்கும் நில அளவும் குறைக்கப்பட்டுத்தான் தீரவேண்டும். நில அளவு குறைக்கப்பட்டால்தான், அதன் மூலம் குவியும் பொருள் அளவும், ஆணவச் செழிப்பும் ஒழிக்கப்பட முடியும். இரண்டுவித கருத்துக்கள் இல்லை இதிலே!

ஆனால் பிரபுத்துவத்தை ஒழிக்கும் வழி எது? ஆணவத்தை அடக்கி ஒடுக்கும் கருவி எது?

சில கோரிக்கைகளின் வெற்றிக்குப் போராட்டங்கள் உதவக்கூடும்.

போராட்டங்கள் வெற்றிக்கு மட்டுமே உத்திரவாதமளிக்கக் கூடியனவல்ல. பல சந்தர்ப்பங்களில் கோரிக்கையின் நியாயத்தைப் பலவீனப்படுத்திவிடவும் கூடும்.

எனவே, எந்தெந்தக் கோரிக்கைகளுக்காகப் போராடலாம்? எந்தெந்தக் கோரிக்கைகளுக்கு மக்களாதரவைத் திரட்டி வலிமை சேர்க்கலாம் என்பதனையெல்லாங் கண்டறிந்து, காலங் கருதி செயல்படுவதுதான் ஒரு அரசியல் தலைமையின் ராஜதந்திரம் எனக் கூறுவார்கள்.

நிலப் பிரபுத்துவத்தை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதுதான். அதற்குப் போராட்டம் என்பதுதான் வழியா?

இந்தப் போராட்டமும் வன்முறையில் சென்று ஆக்கிரமிப்புச் செய்து கொள்வது என்ற வகையில் வகுக்கப்படுவதுதான் தெளிந்த ராஜதந்திரமா?

நண்பா, ரஷ்யப் புரட்சியின் காரணமாக ரஷ்ய நாட்டின் அனைத்துப் பகுதியும், அடியோடு தூக்கியெறியப்பட்டு, புதியதொரு சித்தாந்தத்தை ஏற்றுத் தீர வேண்டிய நிர்ப்பந்த நிலையேற்பட்டதன் காரணமாக, மக்களும் துரிதகதியில் மனமாற்றம் பெற்றார்கள். அப்படிச் செய்ய உகந்த வழிகளை மேற்கொள்ள அரசுக்கும் அது அமைந்த முறை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தது.

இந்திய அமைப்பு அப்படிப்பட்டதுதான் என்றோ, அதுபோன்ற சட்டதிட்டங்களால் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியுமென்றோ அருமை கம்யூனிஸ்டு நண்பர்கள் இன்னமுமா நம்புகிறார்கள்?

விவசாயிகளுக்கு நிலம் என்ற முழக்கத்திலே தடவப்பட்டிருக்கின்ற தித்திப்பு — கம்யூனிஸ்டுகள் நிலையைப் புரிந்துதான் திட்டம் வகுத்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டவில்லையே! அதுவும் ஆக்கிரமிப்புத் திட்டம் என்பது மற்ற பகுதியினரை துச்சமாகக் கருதிச் செயல்படும் போக்கை அல்லவா நினைவுபடுத்துகிறது!

விவசாயிகள் என்று கம்யூனிஸ்டுகள் கூறும்போது எனக்கு எப்போதுமே ஒரு ஐயம் ஏற்படுவதுண்டு.

விவசாயிகள் என்பதற்கு கம்யூனிஸ்டுகள் தரும் விளக்கம்தான் என்ன? கம்யூனிஸ்டுகளது விவசாயச் சங்கத்திலே இருக்கின்றவர்கள் மட்டுந்தான் விவசாயிகளா? ஏனையவர்களுக்கு வேறு பெயர் ஏதேனும் உண்டா?

கம்யூனிசச் சங்கத்தில் அங்கம் பெற்ற பேர்தான் மதிக்கத்தக்கவர்கள். அல்லது கம்யூனிஸ்டுகள் மட்டுமேதான செயலுக்கும் சிந்தனைக்கும் உரியவர்கள். மற்றவர்கள்—மற்ற அரசியல் கட்சியினர் ஏனோதானோக்கள் என்ற எண்ணமா? ஏற்க முடியுமா இந்தக் கருத்தை?

நண்பா, மறைந்த மாமேதை டாக்டர் அண்ணா அவர்கள் அடிக்கடிக் குறிப்பிடுவார்கள்:

> "நான் போராட்டத்தைத் தேடி அலைய மாட்டேன்; வந்த போராட்டத்தையும் விட மாட்டேன்."

என்பார்கள். இதுபோல் நில ஆக்கிரமிப்புப் போராட்டத்துக்கு இப்போதென்ன அவசியம் வந்துவிட்டது? துணைக் கண்டம் முழுவதற்குமே எடுத்துக் கொள்வோம். நாடு தழுவிய முழு அளவுக்கு இப்போது நிலப் போராட்டத்துக்கு ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பம் என்ன?

கம்யூனிஸ்டுகளது பதில், விவசாயத் தொழிலாளர்களது வாழ்க்கை மிகவும் கீழ்மட்டத்திலிருக்கிறது. 23 ஆண்டுகளாகப் பொறுத்துப் பார்த்துவிட்டோம். சொந்த நிலம் கிடைத்தால், உற்பத்தியையும் பெருக்குவார்கள். அவர்களுக்கும் விடிவு ஏற்படும்—என்பதாகத்தானே இருக்கும்.

அவர்கள் கூறுகிற காரணம், ஏற்புடையவை என்றே கொண்டாலுங்கூட, இருபதாண்டுக் காலமாகப் பொறுத்திருந்தார்கள். கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர், வேக வேகமாகப் பட்டாக்கள் வழங்கிக் கொண்டிருக்கிறது. வீட்டு மனைகள் வழங்கிக் கொண்டிருக்கிறது 1972 வரையில் விட்டுவிட்டால், அப்புறம் பெரும் பகுதியும் பிரச்னை தீர்ந்துவிட்டதாகி விடும். அதற்கு இடந் தரக்கூடாது "நாமே முயன்று பெற்றுத் தந்ததாக இருக்கவேண்டும் — என்கிற காரணத்துக்காகத்தான் இந்தத் திட்டமே வகுத்திருக்கிறார்கள். போராட்ட அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறதே!

அல்லவென்றால், இப்போதைய அரசு, ஜனசக்தி சுட்டிக் காட்டி முதலமைச்சருக்குக் காணிக்கையாக்கி இருக்கும் செய்தியில் காணப்படும் அளவைக் காட்டிலும் அனைத்திலும் அதிக அளவுக்குச் செயல்பட்டிருக்கும், செயல்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கும் ஒரு திட்டத்திற்கு—போராட்டம் என்பது எதற்காக?

அல்லது, வழங்கப்படும் பட்டாக்கள் உழுநிலமானாலும், வீட்டு மனையானாலும் அவை கம்யூனிஸ்டுகளுக்கே வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்களா?

அதற்காக விவசாயிகளது புனிதமான பெயர் களங்கப்படுத்தப் படுவதா? களங்கப்படுத்தப் படுவதை அனுமதிக்க முடியுமா?

துணைக்கண்டத்தின் "முற்போக்கு" அரசியல்நிலை, எந்த ஒரு போராட்டமானாலும் அதிலே வன்முறைகள் விளைந்தால்தான், பரபரப்புக்குரியதாக இருக்கும் என்று அரசியல் "விற்பன்னர்கள்" கருதத் தொடங்கிவிட்டார்கள். இந்த நிலையில். பரபரப்புக்குரிய ஒரு போராட்டத்தில், வன்முறை நுழைவுகளில், தீச்செயல்கள் ஏற்படாது என்று எவர் கூற முடியும்?

அத்தகைய விளைவுகளுக்கு இடமளிக்கத்தக்க ஒரு போராட்டத்தை நல அரசு, எப்படி அனுமதிக்கும்? எல்லா சக்திகளையும் திரட்டி தடுக்கத்தானே முற்பட வேண்டும்? வன்முறைகளைத் தடுப்பது — சில வேளைகளில் போராட்டங்களையே தடுப்பதாகத்தானிருக்கிறது! காரணம், போராட்டங்கள் வன்முறைகளை ஈன்றெடுக்கத் தக்கவையாகவே இருப்பதால்!

நண்பா,

> "சாராயக் கிட்டங்கிகளையும், பண்டசாலைகளையும், கடைகளையும், வியாபார ஸ்தலங்களையும், தனியாரது இருப்பிடங்களையும் கொள்ளையடிக்கும் முயற்சி, எச்சரிக்கையின்றி மெஷின்களின் பிரயோகத்தினால் தடுத்து நிறுத்தப்படும்.

—என்று ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது அன்று. எங்கே தெரியுமா நண்பா? ரஷ்யாவில்தான். ஏன்? எதற்காக?

புரட்சி அரசாங்கம் அமைந்த பின்பு, உள்நாட்டு நிலை மிகவும் மோசமாகி விட்டதன் காரணமாக, மக்கள் மனநிலை மேற்குறிப்பிட்ட வழிகளில் ஈடுபடத் தூண்டியது. ஈடுபட்டும் விட்டார்கள் பல இடங்களில். அதனைத் தடுத்து நிறுத்தவேண்டிய அவசியம் பெட்ரோகிராடு சோவியத்துக்கு ஏற்பட்டது. அவசரச் சட்டம் பிறந்தது. பல விதிகளைக் கொண்ட அச்சட்டத்தில் மேலே காட்டப்பட்டிருப்பதும் ஒன்று.

நன்கு கவனி! புதிய சமுதாயத்தையே உருவாக்கியவர்கள்தான் ரஷ்யர்கள்! என்றாலும் தனியாரது

## கம்யூனிஸ்டுகளுக்குக் காணிக்கை!

நில ஆக்கிரமிப்புப் போராட்டம் பற்றி வலது கம்யூனிஸ்டுகள் பக்கம், பக்கமாக எழுதத் தொடங்கிவிட்டார்கள்.

நமது முதலமைச்சரும் அதற்குப் பதில் தந்துவிட்டார். தமிழகக் கம்யூனிஸ்டுகளுக்கு அதுபோதாது என்று கருதி வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த வருவாய்த்துறை அமைச்சர் கே. டி. ஜாக்கப். செய்தியாளர்களைக் கூட்டிவைத்துச் சொல்கிறார். அது இது:

> "கேரள மாநிலத்தில் கட்டாயமாக நிலத்தை ஆக்கிரமிக்கும் செயல் ஏதேனும் நடைபெற்றால், அத்தகைய செயலுக்கு எதிராகக் கேரள அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.
>
> இம்மாதிரியான நடவடிக்கைகளில் எனது கட்சியைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டாலும் அதைக் கேரள அரசு அமைதியாகப்பார்த்துக்கொண்டிராது. உறுதியான நடவடிக்கை எடுத்தே தீரும்.

## ?! வினா-விடை

த. சிவசுப்பிரமணியம், மணச்சநல்லூர்

லாட்டரியினுல், வர்த்தகம், சினிமா போன்ற பல தொழில்களும் பாதிக்கப்படுகின்றன என்று கூறும் எண்ணற்றோரின் கருத்துக்களை ஏற்கிறீர்களா? மறுக்கிறீர்களா?

தொழில்கள் கெடுகின்றன என்று எண்ணற்றோர் கூறுகிருர்கள் என்பது உண்மையா என்று நீங்கள் சிந்திக்க வேண்டாமா? எண்ணற்றோர் என்ருல், யார் அந்த எண்ணற்றோர்? பரிசுச் சீட்டு வாங்குபவர்களா? அல்லது அதனுல் பர்திக்கப்படுபவர்களா? அந்த எண்ணற்றோர், பரிசுச் சீட்டு வாங்குபவர்கள் என்ருல், குறை கூறுவோர் குறைவாகத்தானிருக்க முடியும், வணிகர்கள் என்ருல், பரிசுச் சீட்டின் விற்பனை குறைவானதாக இருக்க வேண்டும்! எது ஐயா சரி!

எஸ். சுந்தரராச்ன், காஞ்சிபுரம்.

நவசக்தி நாளேடு, நக்சலைட்டுகளை ஆதரிக்கும் இதழா?

நக்சலைட்டுகள் என்போர் வெளிப்படையான வன்முறையாளர்கள். 'நவசக்தி' அந்த வன்முறைச் செயல்களுக்கு மறைமுகமாகத் தூண்டுகிறது! வேறுபாடு அவ்வளவுதான்!

எஸ் சீதாராமன், பொள்ளாச்சி.

'நவசக்தி! நாளிதழுக்கு வேறு பெயர் சூட்ட விரும்புகிறோம். பொருத்தமான பெயர் ஒன்று சொல்வீர்களா?

'நக்சல்பாரி' — என்று சூட்டி மகிழுங்கள்.

★

இருப்பிடங்கள் பாதுகாக்கப்பட வேண்டியேற்பட்டது. அதற்கு,

> எச்சரிக்கையற்ற முறையில் — அதாவது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதுவுமின்றி மெஷின்கன்களது உதவியுடன், தடுத்து நிறுத்தப்படும்.

என்பதுதானே பொருள்? அரசின் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது அந்த அரசுக்கு ஏற்பட்ட வழி அது ஒன்றுதான்!

பெட்ரோகிராடு சோவியத், வன்முறைகள் வளரக்கூடும் என்று கருதுகிறது, மெஷின்கன்களின் இயக்கத்துக்கு உத்திரவிடுகிறது.

தனியாரது "இருப்பிடங்கள்," மெஷின்கன்களது துணையோடு பாதுகாக்கப்பட நேரும்போது, தனியாரது "உடைமைகள்" பாதுகாக்கப்பட எது தேவை நண்பா!

இவைகளையெல்லாம் நாம் நமது கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு நினைவுபடுத்தவேண்டிய அவசியமிருக்காது. நாம் தேவைக்காக அந்த வரலாறுகளைப் படிக்கிறோம் அவர்கள் அவசியத்துக்காக அவற்றைப் படித்துக்கொண்டே இருக்கக்கூடும்.

நிலப்போராட்டம்—வன்முறை வழியில் திரும்பக்கூடும் என்பதால் மட்டுமல்ல; அரசின் நடைமுறைகள் நடவடிக்கைகள் அந்தப்போராட்டத்துக்கு ஒரு அவசியத்தையே உண்டாக்கவில்லை. அதனுல் போராட்டம் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்று அரசு கருதுகிறது. நியாயமான இந்தக்கருத்துக்கு நாம் நமது வலிவுமிக்கக் கரத்தினை உயர்த்தித்தான் தீரவேண்டும.

தடுத்துவிட முடியுமா? சந்திப்போம் இரும்புக் கரத்தை—என்பனபோன்ற முழக்கங்கள் 'நாங்கள் வன்முறையில்தான் அரசியல் நடத்துவோம்" என்று கம்யூனிஸ்டுகள் கருதுகிருர்கள் என்பதனை வலியுறுத்தத்தான் பயன்படும்!

இறுதியாக நண்பா, நிலப் பிரபுத்துவ பிரச்னையையும், நிலப் பிரச்னையையும் போராட்டங்களால் என்றுமே தீர்க்க முடியாது; சட்டங்களால்தான் அவை சாத்தியமாகும். அந்தச் சட்டங்களை—வலிவுமிக்கதாக்கும் பணிக்கு வாருங்கள் என்று கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு, உன் மூலம் அன்பழைப்பு விடுக்கிறேன்!

அன்புள்ள,

திருவாரூர் [illegible]

9-ம் பக்கத் தொடர்ச்சி

மாணவியரும், கல்லூரி மாணவ மாணவியரும் தங்கள் ஓய்வு நேரத்தில் இத் தேசிய, சமுதாய, தன்மானப் பணியினை மேற்கொண்டு எல்லோரும் எழுத்தறிவு பெறச் செய்வார்களாக! புதியதோர் அறிவுலகைச் சமைப்பார்களாக!

கல்வி எல்லோர்க்கும் பிறப்புரிமை. அது அறிவை வளர்த்து, ஆண்மையை ஊட்டி, சிந்தனையைக் கிளறி, பொறுப்பேற்கும் தன்மையைத் தழைக்கச் செய்து, உழைப்பிற்கு ஆயத்தமாக்கி, உணர்ச்சிகளைத்தூய்மைப் படுத்தி, உள்ள விரிவோடு அனுப்புவதே பயனுள்ள பிறப்புரிமை யாகும். பிறப்புரிமையைப் பயனுள்ள உரிமையாக்க வாய்ப்பும், உரிமையும், பயிற்சியும் பெற்றுள்ள ஆசிரியத் தோழர்கள், நிம்மதியும், நிறைவாழ்வும் பெற்று, அறிவிலும், ஆர்வத்திலும் ஆற்றலிலும் இயல்பிலும் உயர்ந்து, சிறந்த பணிபுரிந்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ, வாழ்த்துகிறேன். வாழ்க ஆசிரியர் சமுதாயம்! வளர்க கல்வி! படர்க மனிதப் பண்பு! வாழ்க வையம்!

[29—5—70ல் கோவை, தமிழ் நாடு ஆசிரியர் கழகத்தில் பேசியது.]

# புரியலேடா கண்ணு!

"அப்பா!"

"என்னடா கண்ணு?"

"14—6—70 கல்கி' பார்த்திங்களா'ப்பா?"

"ஓ! பார்த்தேனே!"

"அந்த இதழிலே 51-ம் பக்கத்திலே ஒரு துக்கடா வந்திருக்குதே, படிச்சிங்களா'ப்பா?"

"படிச்சேனே! ஏன்? என்ன விஷயம்?"

"கேரள மாநிலத்து எஸ். எஸ். எல். சி ரிசல்ட்லே முதல் மூன்று 'ராங்க்' வாங்கினவங்க யாருமே தாய் மொழியிலே படிக்காமே, இங்கிலீஷ் மீடியத்திலேபடிச்சவங்களாம்'ப்பா. அதை உதாரணம் காட்டி, 'உண்மை நிலவரம் இப்படி இருக்கும்போது இங்கே கல்லூரிகளிலே ஏன் தமிழ் மீடியத்தை மாணவுங்க மீது திணிக்கிருங்க?' அப்படின்னு கேட்டிருக்கு — அந்த துக்கடாவிலே."

"சரி!"

"தாய் மொழியிலேதான் எல்லாப் பாடங்களையும் படிக்கணும்; ஆங்கிலத்திலே படிச்சா சரியாப் பொருள் விளங்காதுன்னு சில அரசியல் வாதிங்க அடிக்கடி சொல்ருங்களே—அது எவ்வளவு பெரிய தவறுன்னு இப்ப புரியுதில்லே? அப்படின்னும் கேட்டிருக்கு அப்பா!"

"சரி! இப்ப என்ன அதுக்கு?"

"தமிழ் நாட்டிலேயும் இங்கிலீஷ் மீடியம் இருக்கு இல்லேப்பா?"

"ஆமாம்டா கண்ணு"

"அப்ப இங்க மாத்திரம் ஏன் இங்கிலீஷ் மீடியத்திலே யாரும் 'ரேங்க்' வாங்கலே?"

"தெரியலேடா கண்ணு!"

"இது ஏன் அந்தத் துக்கடா எழுதினவருக்குத் தெரியலே அபபா?"

"புரியலேடா கண்ணு!"

"ரெண்டாவது சந்தேகம்ப்பா. ரேங்க் வாங்கினவங்களுடைய அப்பாக்கள் மூணு பேருமே உயர்ந்த பதவியிலே இருக்கிறவங்க."

"இருக்கட்டுமே. அதுக்கென்ன?"

"அவங்க, பையன்களுக்கு ட்யூஷன் வைச்சிருக்கலாம் ...... இல்லையாப்பா?"

உனக்கு நான் ட்யூஷன் வைக்கிலேங்கறதைக் குத்திக் காட்டறயாடா? "கண்ணு?"

"இல்லேப்பா. முதல் ரேங்க் வாங்கினவனுடைய அப்பா போலீஸ் சூபரிண்டெண்டெண்டாம். இரண்டாம் ரேங்க் வாங்கினவனுடைய அப்பா ஒரு கணிதப் பேராசிரியராம். மூன்ரும் ரேங்க வாங்கினவனுடைய அப்பா, விருதுநகரிலே ரயில்வே உத்தியோகத்திலே இருக்கிருராம். இவங்க ட்யூஷனும் வைச்சிருக்கலாம். அல்லது அவங்க இருக்கிற 'ஹை கிளாஸ் ஃபேமிலி சிட்சுவேஷ'லே ஏறபடக்கூடிய பழக்க வழக்கங்களும், பேச்சு முறைகளும் அவங்களுக்கு ஆங்கில அறிவைக் கொடுத்திருக்கலாம். இல்லேன்ணு 'சைக்காலஜி'லே சொல்ற மாதிரி பரம்பரைத் தன்மையும் இருக்கலாம் இல்லையாப்பா?"

"இருக்கலாம்டா கண்ணு!"

"இரண்டு வாரத்திற்கு முன்னே இராஜாஜி, பயிற்சி மொழியாக ஆங்கிலததையும் அந்தந்த வட்டார மொழியையும் இணைத்து பாடங்களைப் பேதிக்க வேண்டும் என்று எழுதியிருக்கிருரே, அதற்குப் பிறகு இவர் இந்தத் துககடா எழுதியிருக்கிருரே. அப்படீன்ணு இராஜாஜியின் யோசனையை இவர் எதிர்க்கிருராப்பா?"

"புரியலேடா கண்ணு!"

"இந்தத் துக்கடாக்காரர் இன்ணுென்னும் எழுதியிருக்கிருர் அப்பா. மூன்ருவது ரேங்க் வாங்கின ராமனுேகர் என்ற பையன் சம்ஸ்கிருதத்தை விருப்பப் பாடமாக எடுத்துக்கொண்டு படிச்சானும் – அப்படீன்னும் எழுதியிருக்கிருர் அப்பா."

"அதுக்கென்ன?"

"சம்ஸ்கிருதத்தையும் படிச்சதால் தான் அந்தப் பையன் 'ரேங்க்'லே வந்திருக்கருன்னு இந்தத் துககடாக்காரர் சொலலாமே சொலருராப்பா?'

"புரியலேடா கண்ணு!"

"என்னப்பா எதைக் கேட்டாலும் புரியலே ... புரியலேண்ணு சொல்றீங்களே."

"புரியாமே எழுதின துக்கடாவே எனக்குப் புரியலேடா "கண்ணு!"

—தயாள்

3-ம் பக்கத் தொடர்ச்சி

இதழான "தேச பாரதி"யில் காணப்படுவதாக 'தினமணி' செய்தி தந்திருக்கிறது தினமணிக்கு இச்செய்தி பி. டி. ஐ. தந்ததாகவுமிருக்கலாம். நமக்கு செய்தியல்லவா, நெஞ்சை உலுக்குகிறது.

காஷ்மீரில், துணைக்கண்டத்தின் கருத்துக்கு எதிராக இயங்குவோருக்கு நக்சல்பாரிகள் வெளிப்படையான ஆதரவு தெரிவித்திருக்கிருர்கள்.

நாகலாந்து, மிசோ மலைவாசிகள் தூண்டிவிடப் படுகிருர்கள்.

இதைப் போன்ற ஒரு செய்தியைத் தருகின்ற அளவுக்குத் துணிவு பெற்று விட்டிருக்கிற பிறகும், இத்தக் கொடியவர்களைப் பிடிக்கவும், அடக்கவும் மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது அல்லது துணிவு கொள்ள மறுக்கிறது என்ருல். எதிர்காலம் பற்றிய நம்பிக்கை, இந்தியக் குடிமகனுக்கு அழிந்துவிடக் கூடும்.

அரசுக்கோல் பற்றியிருப்போரின் நலனுக்காக, எந்த நாட்டிலும் மக்கள் வாழ முடியாது—அது ஜனநாயக நாடு என்ற போர்வையிலிருக்கிற வரையில்.

மக்களுக்காகத்தான் ஆட்சி, அதிகாரங்கள், சட்ட திட்டங்கள் எல்லாமே இருக்கின்றன என்பதனைப் பிரதமர் உடனடியாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

அயல் நாடொன்றுக்குத் துணைக் கண்டம் காட்டிக் கொடுக்கப்படுவதை, வேடிக்கைப் பார்த்துக்கொண்டு அல்லது அனுமதித்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் தேச விரோத நடவடிக்கை வேருென்றிருக்க முடியாது என்பதுதான் நமது எச்சரிகையாகும்,

★

[ஆ]சிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
[..]. திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.